பாலவித்யா

தொகுதி I பகுதி VII

ஜூலை 1930


TL

0521, 1:08V

N30.1.7

188773

750 Regd. No. M. 2573.

# பாலவித்யா.



# விஞ்ஞாபனம்

செந்தமிழ்ச் செல்வர்காள்! நந்தம் பாலவித்யா முந்திய பகுதிகள் நுந்தம் பார்வைக்கு அனுப்பப்பட்டிருக்கிறதன்றோ? அதனை நும் அரிய காலத்திற் சிறிதளவேனும் செலவழித்துப் படித்துப் பார்த்திருப்பீர்களென்றே நம்புகிறோம். இதுவரையில் நீவிர் அப்படிப் படிக்க முடியாதிருப்பினும் இனியாகிலும் தயவுசெய்து அவைகளையும், இப்பகுதியையும் படித்துப் பார்த்துச் சந்தாதாரராகச் சேரவும், தம் நண்பர் முதலாயினோர்க்கு எடுத்துச் சொல்லி, அவர்களையும் சந்தாதாரராகச் சேரச் செய்யவும் பெரிதும் வேண்டிக்கொள்கிறோம்.

பாலவித்யா பரந்த பல நன்னோக்கங்களைக் கொண்டு ஆரம்பிக்கப் பெற்றிருக்கிறதென்பதை வேண்டுகோள் என்னும் தலைப்புப் பாடலாலே நாடறியச் சொல்லியுள்ளோம். எந்த நோக்கமும், மக்கள் பலருடைய ஆதரவைப் பெற்றாலன்றி நாட்டிற்பரவி நன்மை பயக்கும் நிலையை அடைய முடியாது. இதனை நீவிரும் உணர்ந்தே இருப்பீர். ஆகவே சந்தாதாரராகச் சேர்தலிலும் சேர்வித்தலிலும் மிக்க விரைவும் ஊக்கமுங் கொள்வீராயின் நம் நாட்டுக்கு எங்களை நல்ல தொண்டராக்குதலாகிய நற்காரியத்தைச் செய்தவர்கள் ஆவீர். எங்கள் தொண்டும் பல நல்வழிகளிலே பரந்து பயன் தருவதாகும்.

" ஒன்றே செய்யவும் வேண்டும் ; ஒன்றும்
நன்றே செய்யவும் வேண்டும் ; நன்றும்
இன்றே செய்யவும் வேண்டும் ; இன்றும்
இன்னே செய்யவும் வேண்டும்."

(கபிலர்)

பதிப்பாளர்கள்.

---

N.B.—சந்தா தொகையை அனுப்பி சந்தாதாரராக சேருபவர்கள் தமக்கு கிடைத்த பகுதிகள், கிடைக்கவேண்டிய பகுதிகள் விபரம் தெரிவிக்கவும்.

குறிப்பு:—சந்தாதொகை செலுத்தாதவர்கள் தாமதமன்னியில் M O. செய்யவும். தொகை அனுப்பாதவர்களுக்கு அடுத்த ஸஞ்சிகை V. P ல் அனுப்பலாகும். V. P.ல் அனுப்புவதில் சந்தாதாரர்களுக்கு 3அணா ஜாஸ்திசெலவு ஏற்படும்.

உ

# பால வித்யா.

(மாதப் பத்திரிகை)

188773
சென்னை-600 008

" உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்"
" எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"

| தொகுதி I | 1930 ஸு ஜூலை மீ<br>பிரமோதூதஸு ஆடி மீ | பகுதி VII |
|---|---|---|

## கடவுள் உண்மை.

(தொடர்ச்சி)

கடலூர்
தமிழாசிரியர் தே. ஆ. ஸ்ரீநிவாஸாசாரி எழுதியது.

நமதுணர்வுகளுள் ஒன்றேனும் ஒன்றற்குப் புலப்பாடுடையனவாயும், இல்லை என்றுரைப்போர் மறுப்பினை யறுக்கு முகாந்தரங்கள் எளிதிற் கிடைப்பனவாயுமுள்ளவற்றினையே நாம் பெரும்பான்மை நம்புதல் செய்கிறோம். அன்றி, உண்டென்னுமுணர்வு திடப்பட்டு, அவ்வுண்மையைக் காரண காரியவாயிலான் உறுதிப்படுத்தும் தருக்கவாற்றல் நமக்கு இல்லாதிருப்பினும், அவ்வமயமும் இந் நம்பிக்கையையே நாம் பெரிதும் மேற்கொள்கின்றோம். இவ் வவனி மிசை அருங்

செயல்கள் பற்பலவற்றினுடெல்லாம் இந் நம்பிக்கை என்பது நிலவியே வருகின்றது. மரணத் தறுவாயிலுள்ள ஒரு நோயாளனின் [illegible] னைச் சுகப்படுத்து முயற்சியில் உழைக்கும் [illegible] வரின்னுரைகளையும், அன்னவரீயும் மருந்துகளையும் நம்பாமலிருக்கி [illegible] றனரா? அப் பண்டிதர் தாமும் 'இறுமுயிர்க்கும் ஆயுள் மருந்தொழுக்கல் தீதன்றால்' என்னும் நம்பிக்கை கொள்ளாதிருப்பரேல் மருந்தூட்டத் தான் முற்படுவரோ! வைத்தியரால் நம்பிக்கை [illegible] உயிர்கள் ஒழிதருதலும் நம்பிக்கை [illegible] உயிர்கள் [illegible] தலும் கண்கூடாகக் காண்கின்றேமன்றே! [illegible] யைக் கண்டுதெளிதற்கியலாத உயிரை ஒட்டிக் கூட்ட [illegible] என்பது நானிலத்தாரால் கொள்ளப்படுகிறதென்றால் மற்றும் பற்பல செயல்களை இந் நம்பிக்கையென்பது ஜீவநாடியனைய நின்றியக்குகின்றதெனக் கூறலில் குற்றமென்னை! எண்ணிக்கையற்ற எத் துணையோ வருஞ் செயல்கள் நம்பிக்கையையே கொழுகொம்பாக் கொண்டு வளர்ந்தெழுகின்றன. இதனைய வேறுவகையாற் கூறின், இந் நம்புதற்றொழில் நசிந்தொழியுமேல் தாணியில் நடைபெறும் எத் தொழில்களும் தரித்தல்பெறு. எத்தனையோ புலவர், புரவலர் தஞ் செயல்களும் மாய்ந்துபடும். உலகக் கட்டுப்பாடு என்னும் கட்டடம் நொறுங்கிப் போம்.

இத்தகைச் சீருடைய நம்பிக்கையென்பது புலனுணர்வு, அறிவு ஆதியவற்றின் உறுதுணைகொண்டு, நெஞ்சிடை முளைத்தெழுகின்றது. பின்னர், கல்வி, கேள்வி, அநுபவமுகங்களால் கிளைத்தோங்கி வளரலாகின்றது. இவ்வகையாக ஒருவனது நம்பிக்கைக் குணம் அவனது அறிவு முதலிய சாதன வலிமைக்குத் தக உரம்படைகின்றது. இவ்விதம் உரம்பெற்றதே திடநம்பிக்கையெனப்படும். இத் திட நம்பிக்கை எளிதில் பிறரால் தகர்த்தற்கியலாதது. இதுவே ஐயப்பாடு, மயக்கநிலை முதலியவற்றை அகத்தினின்றும் வேர்பறித் தெறியுங் கோடரியாம். திடநம்பிக்கை ஒருவிஷயத்திற்கொண்டாரொருவனை எளிதிற்றிருப்பி வேறுவழைப் படுத்துவது மிக்க அருமையாம். நம்பிக்கைவலிவு அஃதுண்டையானை அவ்வழிக்கண் உலையா முயற்சிகொண்டுழைக்குமாறு ஊக்குகின்றது. ஆகலின் முயற்சிக்கே நம்பிக்கைத் திடம் தாயாகின்றது. தேர்ச்சியில் திடமனம் படைத்த வித்தியார்த்தி



தளராதுழைப்பதும், அங்ஙனமில்லா மாணவன் அயர்ந்திடுவதும் மெய்ப்பாடேயாம். சுருங்கச் சொல்லின், அற்பப் புலனுணர்வு முதலிய காரணங்களால் நம்மில் உதித்து, அறிவு அநுபவ முதிர்ச்சியால் பெருக்கமும் வன்மையும் எய்தித் தன்னையுடையோனை ஒரு குறித்த நெறிக்கண் இடையறாதுழைக்குமாறு தூண்டுவது நம்பிக்கையின் பேரியல்பெனவிளங்குகிறது.

இவ்வகையாகவே, காரண உணர்வினால் கடவுள் உண்மை நம் மனத்தில் தோற்றஞ் செய்தவுடன் அது சிதையாவண்ணம் செவ்வி தின் ஓம்பி, அது திண்மைப்படும் செந்நெறியினில் நாம் நடக்க வல்லோமாயின், இத் தெய்வநம்பிக்கை என்பது நமதுள்ளத்திடை அசைக்கொணா ஆற்றலடைகின்றது. அப்பால் இத் தெய்வத் திட நம்பிக்கையே நம்மை அப் பொருளை யடையுமாற்றுட்படுத்தி—அதினிற் சலிப்புறாது படருமாறு தொழிற்படுத்துகிறது. இம் மார்க்கங்கள் அவ்வவரது ஞான முதலிய துணைகளுக்கேற்பப் பலவகைப்படும். இது நிற்க, முற் [illegible]ய உழைப்பினால் ஒருவித பலன் கிட்டுகிறது. இப் பலனையே முடிவில் பேரின்பம் என்றும்—வீடு—மோக்ஷம்—முத்திப்பேறு எனவும் பலவகையாகச் சான்றோர் சாற்றியுளர்.

எனவே நம்மகத்துள் தெய்வமெய்ப்பாடு தோன்றியதும், அதனோடு அமையாமல் பலனடையுந்தனையும் வேளாளன் பயிரைப் பாதுகாத்தல் போல அத் தெய்வநல்லுறுதி பெருகிவளர்தற்பொருட்டு, கடவுட் செந்நெறியுள் நம் நெஞ்சத்தை ஆழங்காற்படுத்தவல்ல—அறநூல் கேள்வி, அறநூற் கல்வி, நூற்றுணிவுசெய்தல், அவ்வினத்தாரொடு பழகல் முதலிய செய்தல் வேண்டும். இந் நாட்டம் நிறைவுற நிறைவுற மேற்கூறிய தாநெறியின் வெளிப்பாடு நம்மகத்து ஒளிரத் தலைப்படுகின்றது. பின்னர் நம்மனோரின் உழைப்புக்கேற்பத் தெய்வபத்தி ஓங்கலாகிறது இப் பத்தியே தனக்குச் சார்பு அல்லாதனவற்றை அகற்ற அகற்ற, அந் நீக்கம் துன்பத்தேய்வைச் செய்யலாகிறது. இங்ஙனம் துன்பக்கடல் சுவறச் சுவற இன்பவாரிதியின் எழிற்கரை எய்தலாகிறது. இவ்வித இன்பப்புணரியினை வாய்மடுத்துண்பவரே உலக நிலையாமை-மக்கட்குப் பேரறிவு கொளுவுதல் முதலிய பெருந்தொழில்களில் ஈடுபட்டுத் தம்மநுபவ நிகழ்ச்சிகளை பற்பலவாறுகப் பரக்கக்

கூறியுள்ளார். இப் பொன்மொழிகளின் ஈட்டங்களை ஞானநூல்க ளென ஆத்திகர் யாத்தழுத்தழுக்கப் போற்றும் தேவார, பிரபந்த முதலிய வைகளாம். இவ் வுண்மை, இந்நூல்களிடை அருவித் துருவி ஆராய் வோர்க்குத் தெள்ளிதிற் புலனாம். மேற்கூறிய நூலாசிரியர்கள் — புல மையேனும் — பொருளையேனும் — பெறக்கருதி இந்நூற்களை யாத்தன ரில்லை. கைம்மாறு கருதாக் கார்முகில்போலக் கருணைததும்பிவழிய — மாந்தரனைவரையும் தெய்வநல்லாற்றுட்டிணைக்கச் செய்தல் வேண்டு மென்னும் பெருநோக்கம் ஒன்று கொண்டேயாம். சமயப் பூசல் முதலிய சிறுகலாங்கட் கிடந்தராது பொதுநோக்குடனும் சமரச ஞா னத்துடனும் நன்னூற்கள் பலவற்றையும் ஓதித்தெளிந்து தெய்வத் தூ நெறியிடத்து ஆர்வங்கொண்டு அவ்வழி உழைத் தழைத்து அது தரும் பெருவாழ்வினைப் பாலர் முதற் பலரும் அடைதல்வேண்டும் என் னும் கருத்துட்கொண்டு இக்கட்டுரையினை இதன்முன் இருவாய்ப் படுத்துகிறேன்

(Copyright reserved by the Author)



"சரி; உங்களிஷ்டப்படி செய்யுங்கள். நான் போகி றேன்." என்று விடைபெற்றுக்கொண்டு போய்விட்டார்.

செட்டியார் போனதும், கோபாலய்யர், என்ன செய் வதென்று விளங்காமல், நிம்மதியற்று அங்கும் இங்கும் உலாவிக்கொண்டே சிந்திக்கலானார். "சேச்சே! சுந்தரம் ஒரு பொழுதும் இப்பேர்ப்பட்ட கார்யத்தைச் செய்திருக்க மாட்டான். ஒருகால் அவனறியாமல் அவன் வீட்டிலிருக் கும் வேறுயாராவது விஷமம் செய்திருக்கலாம்; எல்லா வற்றிற்கும் நான் உடனேபோய் அவனைக்கேட்பது நலம்." என்று நிர்மானித்தவராய், தம் மனைவியிடம் சொல்லிக் கொண்டு, வெளியே சென்றார்.

காமாக்ஷியின் அத்தை பொன்னுப்பாட்டியும் அதே தெருவில் குடியிருந்தாளென்பதை நாம் இதுவரையில் சொல்ல மறந்துவிட்டோம். கோபாலய்யர் அவ்வழியாய்ப் போகும்பொழுதெல்லாம் அதற்குள் நுழைந்து பொன்னுப் பாட்டியின் யோகக்ஷேமங்களை விசாரிக்காமற் போவதில்லை யாகையால் நற்சமயமும் அதற்குள் நுழைந்தார். ஆனால் அதில் ஒருவரும் காணப்படவில்லை. ஒருகால், பொன்னுப் பாட்டி காவேரிக்குப் போயிருப்பாளென்று நினைத்து, அவளுடைய பிள்ளையாகிய நம் சீச்சு மாடியில் இருக்கிறு னோவென்று பார்க்கும் எண்ணத்துடன் மாடிப்படிகளில் ஏறினவர், மேலே சீச்சுவும் மற்றொருவனும் அட்டஹாஸத் துடனும் உரத்த குரலிலும் பேசிக்கொண்டிருப்பதைக் கேட்டு, தம்மைத்தாமே கட்டுப்படுத்த முடியாதவராய், அவர்களுடைய சம்பாஷணையை மறைவில் நின்றுகொண்டு கவனித்தார். அது கீழ்க்கண்டவாறு:—

சீச்சு:— "அடே லக்ஷ்மணா! நான் இப்படத்தைச் சீக்கிரம் அவளிடம் கொடுத்துவிடுவதாய் உத்தேசம்."

லக்ஷ்:— "என்ன? கொடுத்துவிடுவதா? வேண்டா! உனக் குப் பைத்தியமா? நீ இதுவரையில் பணத்தை ஓட் டாஞ்சல்லிபோல் செலவழித்ததற்கும் நாளுக்கொரு சட்டைபோட்டுக்கொள்ளுவதற்கும் சாதகமாயுள்ளது இதல்லவோ?"

சீச்சு:—"வாஸ்தவமே! ஆனால் தற்சமயம் இதைக்காட்டிலும் அபாரமான ஒருவேலை செய்திருக்கிறேன். அதன் பலனாய் இனிமேல் நான் அவளிடமிருந்து எவ்வித உதவியையும் எதிர்பார்க்கவேண்டியது அவசியமில்லை. தவிர, அவளை மேலும் கஷ்டப்படுத்துவது சரியல்ல."

லக்ஷ்:—"ஆனால், நீ இப்படி அவளிடமிருந்து பணம் பறித்ததற்கு நானல்லவோ காரணம்? ஏண்டா! அவ்வளவு சாமர்த்தியமாய்நான் அப்படத்தைபிடிக்காமலிருக்கும் பக்ஷத்தில் நீ இவ்வளவு லாபம் அடையமுடியுமா?"

சீச்சு:—"இல்லையென்று நான் சொல்லவில்லையே. ஆனால், நான் அவளிடமிருந்து பணம் வாங்கியபொழுதெல்லாம் உனக்கும் பங்கு கொடுக்கவில்லையோ?"

லக்ஷ்:—"சரி; அதுபோகட்டும். உள்ளதைச்சொல்லு. நீ இதுவரையில் அவளை எவ்வளவுதரம் அநுபவித்திருப்பாய்?"

சீச்சு:—"நீ இந்தக் கேள்வி கேட்பாயென்று எனக்குத் தெரியும். அன்று அப்படம் பிடிக்கப்பட்டபொழுது, நாங்களிருந்த நிலைமையிலிருந்து, நீ தப்பெண்ணம் கொண்டுவிட்டாய் போலிருக்கிறது. பைத்தியமே! அச்சமயம் அவளுக்கு ஒரு மயக்கமருந்தைக் கொடுத்திருந்தேன். அவள் தன் சுயநினைவுடனிருந்திருக்கும் பக்ஷத்தில் நாம் அக் கார்யத்தைச் செய்திருக்கவே முடியாது. அதற்குப் பிறகு, இதுவரையில் நான் அவளைத் தொட்டதுமில்லை. நான் என்னால் முடிந்த வரையில் பிரயாசைப்பட்டேனென்பது வாஸ்தவம். ஆனால் ஒன்றும் பலிக்கவில்லை. அவளைப் பலாத்காரம் செய்யவும் எனக்குத் தைர்யமில்லை. ஏனென்றால் நான் ஒரு சமயம் திடீரென்று அவளை முத்தமிட எத்தனித்தபொழுது, அவளுக்குண்டான கோபத்தில், பக்கத்திலிருந்த ஒரு அரிவாள்மணையைக் கையிலெடுத்துக்கொண்டாள். அதிலிருந்து அந்த எண்ணத்தையே விட்டுவிட்டேன்."



லக்ஷ்:—"பூ! இவ்வளவுதானா? சரி; வா போவோம்."

அச்சமயம், வெளியில் நின்றுகொண்டிருந்த கோபாலய்யர் உள்ளே எட்டிப்பார்த்தார். சீச்சு ஜாக்கிரதையுடன் ஒரு படத்தை ஒரு புஸ்தகத்திற்குள் ஒளித்துவைப்பதைக் கண்டார். மறுநிமிஷம், தோழர்களிருவரும் வெளியே வரும் சப்தம் கேட்க, மெல்லச் சமீபத்திலிருந்த ஒரு தட்டியின் மறைவில் ஒளிந்துகொண்டார். கீழேசென்ற இருவரும், அதற்குள் திரும்பிவந்திருந்த பொன்னுப்பாட்டியிடம் சொல்லிக்கொண்டு, வெளியே போய்விட்டதை அறிந்ததும், கோபாலய்யர் சற்றும் தயக்கமின்றிச் சீச்சுவின் அறைக்குள் நுழைந்து, அப்படத்தை எடுத்துப்பார்த்தார். உடனே அவருக்குண்டான கோபத்திற்களவில்லை. அவருடைய முகம் பயங்கரமாய் மாறியது. ஆவேசத்துடன் தம் பற்களை நெறநெறவென்று கடித்தார். அதற்குக் காரணம், அப் படத்தில் அவருடைய மனைவியாகிய காமாக்ஷியும் சீச்சுவும் ஒரே கட்டிலில் இங்கு வர்ணிக்கத் தகாதவிதம் சயனித்துக்கொண்டிருந்தார்கள்.

பிறகு, அப் படத்தைத் தம் சட்டைப்பையில் வைத்துக்கொண்டு கீழே சென்றார். நல்லவேளையாய், அச்சமயம் பொன்னுப்பாட்டி கொல்லைப்பக்கமிருந்ததால், திருடனைப்போல் வெளியே நழுவிவிட்டார். அவருடைய தேகம் இன்னும் பதறிக்கொண்டிருந்தது "ஹா! சண்டாளன்! என்ன கார்யம் செய்திருக்கிறான்? நான் அவர்களுடைய சம்பாஷணையைக் கேட்காமலிருந்து, இப்படத்தைப் பார்த்திருப்பேனாகில், காமாக்ஷி என்ன சொன்னபோதிலும் அவளை நம்பமுடியுமோ? ஆஹா! நான் வெளியூர் போயிருந்தபொழுது, இப்பாபி என் வீட்டில் பல அக்கிரமங்கள் செய்திருக்கிறான்போலிருக்கிறது." என்று சிந்தித்துக்கொண்டே, தாம் முதலில் யோசித்தபடி தம் நண்பர் சுந்தரமய்யர் வீட்டிற்குப் போகாமல், துரிதமாக தம் வீட்டைநோக்கிச் சென்றார். கடைசியில், அவர் தம் அறைக்குள் நுழைந்ததும், அங்கு ஒரு மேஜைமேல் ஒரு கடிதம் வைக்கப்பட்டிருப்பதைக் கண்டு, ஆச்சர்யப்பட்ட

வராய் அதை எடுத்து வாசித்துப்பார்த்தார். அதில் கீழ்க் கண்டவாறு எழுதப்பட்டிருந்தது.

“மன்மதனைப்போன்ற தங்களை என் பர்த்தாவாக அடைந்திருந்தும், பூர்வ ஜன்மத்தில் நான் செய்திருக்க வேண்டிய பாபங்களின் பலனாய், நான் தங்களுடனிருந்த இந்தப் பலவருஷங்களில் ஒரு நிமிஷநேரமாவது தங்களை அநுபவிக்கக் கொடுத்துவைக்காத பாபியானேன். நான் மிகவும் பணிவுடன் தங்களுக்கு எழுதிக்கொண்ட உண்மையான விஷயங்கள் :—

தாங்கள் என்னை விவாஹம் செய்துகொண்டதும், தங்களுடைய முதல் மனைவி இறந்த வருத்தம் தாங்காமல், தாங்கள் என்னைத் தனிமையில் இங்கு விட்டுவிட்டு, வெளியூர் சென்றிருந்த காலத்தில், நான் செய்யக்கூடாத பல காரியங்களைச் செய்துவிட்டேன். ஆனால் நான் அவைகளைச் செய்ததற்கு காரணம், பிறருடைய பலவந்தமே என்பதைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

தாங்கள் சென்ற 6மாத காலத்திற்குள், என் பெற்றோர்களிருவரும் இறந்துவிட்டது தாங்களறிந்தவிஷயமே. எனவே, என் உறவில் மிஞ்சியவர்கள், என் அத்தையாகிய பொன்னுப்பாட்டியும், அவளுடைய பிள்ளையாகிய பிச்சுவுமே என்பதை நான் சொல்லவேண்டியதில்லை. இவ்விருவரும் அடிக்கடி நம் வீட்டிற்கு வருவதும் போவதுமாயிருந்தார்கள். என் அத்தைபிள்ளைதானே என்று நம்பி, நான் அவனுடன் தாராளமாய்ப் பழகியதின் பலனாய், இந்தப் பாபி பிச்சுவின் சூழ்ச்சிக்கு இரையானேன்.

இன்னும், அவன் எப்படி அக் காரியத்தைச் செய்தானென்பது எனக்குத் தெரியவில்லை. ஒருநாள் திடீரென்று, அவன் என்னிடம் ஒரு புகைப்படத்தைக் காண்பித்தான். அது, நானும் அவனும் ஒரே படுக்கையில் சயனித்துக் கொண்டிருந்த சமயத்தில் எடுக்கப்பட்டதுபோலிருக்க. நான் அநுபவித்த பயத்திற்கு அளவில்லை. அதைக்கொண்டு அவன் நினைத்தபொழுதெல்லாம், என்னைப் பயமுறுத்தி என்னிடமிருந்து பணம் பறிக்க ஆரம்பித்தான். நான்



மறுக்கும்பக்ஷத்தில், வரக்கூடிய அவமானத்தையும் ஆபத்தையும் கண்டு நடுங்கி, அவன் கேட்கும்பொழுதெல்லாம் பணம் கொடுத்துவந்தேன்.

ஒருநாள் நான் அவன் முன்னிலையில், தங்களுடைய பெட்டியைத் திறக்க, அதிலிருந்த கமலத்தின் தாயாருடைய நகைகளைப் பார்த்துவிட்டான். உடனே, அவைகளையும் அவன் கேட்க, முதலில் நான் கண்டிப்பாய் மறுத்துவிட்டேன். ஆனால் அப் பாபி, அந் நகைகளுக்குப் பதிலாக, இமிடேஷன் நகைகளை வைத்துவிட்டால், நீங்கள் அதைக் கண்டுபிடிக்க முடியாதென்று சொல்லவே, வேறு வழியில்லாமலும் அவனைத் தடுக்கத் தைர்யமில்லாமலும் சம்மதித்தேன். ஆகவே, இக் காரியத்தைச் செய்தது பிச்சுவேயொழிய, தங்களுடைய நண்பரல்ல. இது நடந்து பல வருஷங்களாய்விட்டன. தாங்கள் மறுபடியும் திரும்பி வந்ததும், இங்கு நடந்த எல்லாவற்றையும் தங்களிடம் ஒப்புக்கொண்டு மன்னிப்புக் கேட்க நினைத்தேன். ஆனால் நான் அப்படிச் செய்யும்பக்ஷத்தில் தன்னைக் காட்டிக்கொடுத்துவிட்ட கோபத்தினால், இந்தச் சண்டாளன் அப்படத்தைத் தங்களிடம் காட்டிவிடுவானென்று பயந்தும், அவனப்படிச் செய்துவிட்டால், நீங்கள் என்மேல் சந்தேகித்து என்னைத் தள்ளிவைத்துவிடுவீர்களென்று நடுங்கியும், இதுவரையில் சும்மா இருந்துவிட்டேன். ஆனால், இப்படி நான் தங்களை மோசம்செய்ததால், நான் பட்ட கஷ்டம் தெய்வத்துக்குத்தான் தெரியும். இந்நிலையில், இன்றுகாலை இந்நகைகளின் விஷயம் வெளியாகவே இனி இதை ஒளிப்பது பாபமென்று நினைத்து நடந்தவிஷயங்களைத் தங்களுக்கு இக்கடிதத்தின் மூலமாய்த் தெரிவித்துவிட்டுத் தற்கொலை செய்துகொள்ள நிச்சயித்துவிட்டேன். ஹா! என் நாதா! தாங்கள் ஒருகால் அப்படத்தைக் காண நேரிட்டால், அதை நம்பாமலிருக்கும்படி மன்றாடிக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இன்னும் நான் சொல்லிக்கொள்ளவேண்டியது ஒன்றுண்டு. அதாவது இதுவரையில் இப்படித் தாங்கள் என்மேல் சற்றும் பிரியமில்லாமலிருந்ததற்குக் காரணம், தங்கள் பெண் கமலமே என்று நினைத்து அவள்மீது பொறாமை

கொண்டு அவளை வெறுத்துவந்தேன். இப்பொழுது நான் துரதிர்ஷ்டசாலியாயிருந்ததற்குக் காரணம் என் தலைவிதியேயென்று நினைப்பதால் நான் அவளுடைய மன்னிப்பைக் கேட்டதாகச் சொல்லவும்.

இப்படிக்கு,
காமாக்ஷி.''

இதை வாசித்ததும், கோபாலய்யர் பதறிய மனதுடன் பைத்தியம் பிடித்தவர்போல் "ஹா! என் கண்மணி!" என்று அலறியவண்ணம் தம்மனைவியின் அறையைநோக்கி ஓடினார். அது உட்பக்கம் தாளிடப்பட்டிருந்தது. இதற்குள் அவருடைய சரீரம் முழுமையும் நடுங்கிக்கொண்டிருந்தது.

"காமாக்ஷி! காமாக்ஷி!!" என்று ஆத்திரத்துடன் அவர் பலதரம் அக்கதவைத் தட்டியும், பதிலில்லாமல் சிறிதும் சப்தமில்லாமல் இருக்க, ஒருகால் அவள் ஏற்கனவே தற்கொலை செய்துகொண்டுவிட்டாளோவென்று திகிலடைந்தவராய் அக்கதவிலிருந்த ஒரு சந்தின்வழியாய் உள்ளே எட்டிப்பார்த்தார். மறுவினாடி,

"காமாக்ஷி! வேண்டாம்! வேண்டாம்!! என்று, கெஞ்சிய குரலில், மேலும் அலறினார்.

அச்சமயம் அவர் கண்ட கோரக்காக்ஷியை உடனே சொல்லிவிடுவோம். அவ்வறையின் மத்தியில் காணப்பட்ட ஒரு நாற்காலியின்மேல் கமாக்ஷி, முகம் வெளுத்து கண்களிலிருந்து நீர் ஆறாய்ப்பெருக, தன் இருகரங்களையும் கூப்பித் தெய்வத்தைப் பிரார்த்தித்தவண்ணம் நின்றுகொண்டிருந்தாள். மேலே ஒரு வளையத்திலிருந்து தொங்கிக்கொண்டிருந்த ஒரு கயிற்றின் மற்றொரு முனையிலிருந்த ஒரு சுருக்கு அவளுடைய கழுத்தில் மாட்டப்பட்டிருந்தது. ஆனால், நாம்சொன்னவிதம், கோபாலய்யர் அவ்வறையின் கதவைத் தட்டவே, திடுக்கிட்டவளாய் ஒன்றும் தெரியாமல் திகைத்து நின்றாள். இதற்குள் கோபாலய்யர், மறுபடியும்,

"வேண்டாம்! வேண்டாம்!" என்று கெஞ்ச, நாற்காலியைவிட்டு கீழே இறங்கிக் கதவையணுகி, ஏதோ பேச முயன்றாள். ஆனால் முடியவில்லை. பிறகு இருகரங்களாலும்



தன் மார்பையழுத்திக்கொண்டு "ஓ" என்று அழுவாரம்பித்தாள். கடைசியில் கதவைத் திறக்காமலே சிரமத்துடனும், சொல்லொணாப் பயத்துடனும்,

"நாதா! நான் பல குற்றங்களைச் செய்தவள். தங்களை மோசம் செய்த பாபி. தங்களுடைய மனைவியாயிருக்கச் சிறிதும் யோக்கியதையற்ற சண்டாளி. ஆனால்......." என்று அவள் மேலே பேசுமுன், கோபாலய்யர்,

"காமாக்ஷி! நீ ஒரு குற்றமும் செய்யவில்லை. சிச்சு செய்த அக்கிரமங்களையெல்லாம் கண்டுபிடித்துவிட்டேன். நீ எள்ளளவும் பயப்படாமல் உடனே கதவைத் திறந்து என்னை உள்ளே வரவிடு." என்று மன்றாடினார்.

தன் பர்த்தாவின் வார்த்தைகளைக் கேட்டதும், காமாக்ஷிக்குண்டான ஆச்சர்யத்தை வர்ணிக்கவும்வேண்டுமோ? தன் செவிகளையே நம்பாதவள்போல் அப்படியே சிலைபோல் நின்றாள். கோபாலய்யர், அவள் தம்மை நம்பாமல் பயந்து தம்மை உள்ளேவிடத் தயங்குவதைக் கண்டு,

"காமாக்ஷி! நீ பயப்படவே வேண்டாம். கண்மணி! நீ இப்படி என்னைச் சந்தேகிப்பது அழகல்ல. அப்படுபாவி உன்னை இக்கதிக்குள்ளாக்கச் சாதகமாயிருந்த அப்படம், இதோ என்னிடமிருக்கிறது. நீ சுத்த நிரபராதியென்பது எனக்கு நன்றாய்த் தெரியும். இன்னும் வேண்டுமானால், நான் உன்னை ஒன்றும் செய்வதில்லையென்று தெய்வத்தின் மேல் ஆணையாய்ச் சொல்லுகிறேன். உடனே கதவைத் திறந்துவிடு." என்று மேலும் புலம்ப, காமாக்ஷி சற்றுத் தைரியமடைந்து கதவைத் திறக்கவே, கோபாலய்யர் அப்படியே பாய்ந்து அவளை ஆவலுடன் அணைந்துகொண்டு,

"அசடே! என்ன காரியம் செய்யத் துணிந்துவிட்டாய்?" என்று கேட்கக் காமாக்ஷி, இன்னும் சந்தேகத்துடன்,

"நாதா! இவ்விதம் தாங்கள் என்னை மன்னித்துவிட்டதை என்னால் நம்பமுடியவில்லையே. ஹா! தெய்வமே! இப்படி நான் காப்பாற்றப்படு......." என்று களிப்பின்

மிகுதியால் மேலே பேசச் சக்தியற்று, ஆவலுடன், தன் நாதருடைய முகத்தை உற்றுநோக்கியவண்ணம் நின்றாள். இதற்குள், கோபாலய்யருடைய நேத்திரங்களிலிருந்தும் கண்ணீர் வெளிக்கிளம்பி அவருடைய கன்னங்களில் வழிந்துகொண்டிருந்தது. அவர், அன்புடன்,

"காமாக்ஷி! இச்சமயம் நான் வராமலிருந்து நீ ஏதேனும் அசட்டுத்தனமாய்ச் செய்திருக்கும்பக்ஷத்தில் என் கதி என்னவாகும்?" என்று வினவக் காமாக்ஷி, வியப்பும் சந்தோஷமும் கலந்த குரலில்,

"ஆனால் நான் இறந்திருக்கும்பக்ஷத்தில், நீங்கள் வருந்தப்பட்டி......" என்று மேலே பேசுமுன், கோபாலய்யர், அவளைத் தடுத்து,

"காமாக்ஷி! நான் ஈவு இரக்கமற்ற கொடும்பாவி என்று நினைத்துவிட்டாயோ? வாஸ்தவமே! இதுவரையில் நான் உன்னுடன் சரிவரப் பேசாமலும், நான் உன்னை மிகவும் வெறுப்பவன்போலவுமிருந்தேன். ஆனால், நீ இறந்தாலும் பாதகமில்லையென்று நினைக்க நான் அவ்வளவு சண்டாளனல்ல. கண்மணி!...." என்று அவரும் மேலே பேசச் சக்தியற்றவராய்த் தம் மனைவியை மறுபடியும் பிரியத்துடன் அணைந்துகொண்டார்.

அச்சமயம், அங்கு வந்துசேர்ந்த கமலம், தான் அதுவரையில் ஒருநாளும் காணாதவிதம், தன் தந்தையும் சித்தியும், ஒருவரையொருவர், அணைந்தவண்ணம் நிற்பதைக் கண்டு ஆச்சர்யப்பட்டவளாயும், மேலே வளையத்திலிருந்து தொங்கிக்கொண்டிருந்த கயிற்றில் சுருக்கைக்கண்டு திடுக்கிட்டவளாயும், கொஞ்சநேரம் திகைத்து நின்றாள். பிறகு கலவரத்துடன் அவள், அக் கயிற்றைச் சுட்டிக் காண்பித்து,

"அப்பா! என்ன இது?" என்று வினவக் கோபாலய்யர் நடந்த விஷயத்தை அவளுக்குச் சொல்லவே, அவளுடைய முகம் கோபத்தாலும் வெறுப்பாலும் விகாரமடைந்தது.



"எனக்கு ஆதியிலிருந்தே, சித்தியும் இப் பழிகாரனிடம் சிக்கிக்கொண்டு கஷ்டப்படுகிறாளென்பது, நன்றாய்த் தெரியும். ஆஹா! என்ன அநியாயம்! இப் படுபாவி, இவ்விதம், பேதைப்பெண்களைத் தன் சூழ்ச்சியில் மாட்டிக்கொள்ளும்படி செய்து, அவர்களைச் சற்றும் ஈவு இரக்கமின்றி ஹிம்சிப்பதைத் தெய்வமும் பார்த்துக்கொண்டிருக்கிறதே!" என்றாள்.

இதைக் கேட்டதும், கோபாலய்யர், திடுக்கிட்டவராய்,

"அம்மா கமலம்! நீ பேசுவது எனக்கு விளங்கவில்லையே. ஆனால் அவன் உன்னையும்...." என்று மேலே பேசுமுன், கமலம்,

"ஐயோ! அப்பா! நான் இப் பழிகாரனிடம் அகப்பட்டுக்கொண்டு படும் கஷ்டம் தெய்வத்துக்குத்தான் தெரியும். எப்படியோ சித்தி தப்பித்துக்கொண்டுவிட்டாள். என்னுடைய கதி என்னவாகுமோ தெரியவில்லையே." என்று சொல்லிவிட்டுத் தேகங் குலுங்க அழ ஆரம்பித்தாள்.

சென்ற ஒருமணிநேரம் வரையில் சாந்தமே அவதாரம்போலிருந்த கோபாலய்யர், இதைக் கேட்டதும், எப்பேர்ப்பட்டவனும் அஞ்சத்தக்க ரௌத்திராகாரத்துடன், தம் பற்களைக் கடித்துக்கொண்டு,

"இவனை லேசில் விடேன். அயோக்கியபயல்! இருக்கட்டும். இதோ சென்று அவனுடைய எலும்புகளை நொறுக்கிவிடுகிறேன்." என்று கர்ஜிக்க, கமலத்தின் முகம் வெள்ளைவெளேரென்று வெளுத்தது. அவள், நடுநடுங்கித் தன் தந்தையின் கரங்களைப் பற்றிக்கொண்டு,

"அப்பா! வேண்டாம்! வேண்டாம். அவனைத் தொடவும் தொடாதேயுங்கள். விபரீதமாய் முடியும்." என்று அலறவே, கோபாலய்யர், திடுக்கிட்டு, மிகவும் கவலையுடனும் பீதியுடனும்,

"அம்மா! அவனால் என்ன செய்யமுடியும்? கமலம்! இனியாகிலும் விஷயத்தை ஒளிக்காமல் சொல்லிவிடு." என்று கேட்டார்.

அச்சமயம், அவர்களை நோக்கி யாரோ வரும் சப்தம் கேட்கவே, எல்லோரும் திரும்பிப் பார்த்தார்கள். அதுவும் சீச்சுவேயொழிய வேறல்ல. அவனைக் கண்டதும், கோபாலய்யருடைய முகம் சிவந்தது. அவர் தம் கோபத்தை அடக்கமுடியாமல், கமலத்தின் பிடியிலிருந்து திமிறவே, அப் பெண்மணி பதறிய மனதுடன்,

"அப்பா! வேண்டாம். உங்களை மன்றாடிக் கேட்டுக் கொள்ளுகிறேன். நீங்கள் அவன் கோபத்தைக் கிளப்பும் பக்ஷத்தில், அது நடந்த ஒருமணி சாவகாசத்திற்குள், நான் கைது செய்யப்படுவேன்." என்று கூறிவிட்டு, சற்றும் தாமதிக்காமல், பிசாசைக் கண்டவள்போல் அவ் அறையை விட்டு ஓடினாள்.

இதைக் கேட்டதும், கோபாலய்யர், 'ஹா!' என்று பெருமூச்செறிந்து, மண்டையில் ஓங்கி அடிக்கப்பட்டவர் போல், பக்கத்திலிருந்த ஒரு நாற்காலியில் தொப்பென்று விழுந்தார்.

நிற்க, மறுநிமிஷம், உள்ளே நுழைந்த சீச்சு, அங்கு அதுவரையில் நடந்த விஷயங்களை அறியாதவனாகையால், வழக்கம்போல் புன்சிரிப்புடன்,

"மாமா! என்ன விசேஷம்?" என்று வினவினான். கோபாலய்யர், தம் புதல்வியின் அபாய நிலைமையை நினைத்து, தம் சினத்தைச் சிரமத்துடன் அடக்கிக்கொண்டு,

"கலியுகத்தில் விசேஷத்துக்கு என்ன குறைச்சல்?" என்று விடையளிக்கவே, சீச்சு சிரிக்க ஆரம்பித்தான்.

அவன் உள்ளே நுழைந்ததும், காமாக்ஷி, அவனைப் பார்க்கவும் சகிக்காதவள்போல், வெளியே போய்விட்டாள்.

சீச்சு:—"மாமா! உங்களிடம் ஒரு முக்கியமான விஷயத்தைப் பற்றிப் பேசும் பொருட்டு வந்திருக்கிறேன்."

கோபா:—"அப்படியா? என்ன விசேஷம்?"

சீச்சு:—"ஆனால் அதைப் பற்றிப் பேச எனக்கு வெட்கமாயிருக்கிறது."



கோபா:—"வெட்கமா? ஆஹா! நீ வெட்கப்படுவதைக் காண எனக்கு மிகவும் ஆச்சர்யமாயிருக்கிறது."

சீச்சு:—"என்ன மாமா! நீங்கள் பேசுவதின் அர்த்தம் எனக்குத் தெரியவில்லையே?"

கோபாலய்யர் எவ்வளவோ சிரமப்பட்டும், அவரால் தம் கோபத்தையும் வெறுப்பையும் மறைத்துக்கொள்ள முடியவில்லை. அதைக் கண்ட சீச்சுவின் மனதில் ஒருவித சந்தேகம் தோன்றியபோதிலும், அவன், சற்றும் லக்ஷியம் செய்யாமல்,

"மாமா! உங்களுக்கு என்னுடன் பேச இஷ்டமில்லை போலிருக்கிறது." என்றான்.

"அசடே! அப்படியொன்றுமில்லை. விஷயத்தைச் சொல்லு." என்று கோபாலய்யர் துரிதப்படுத்த, சீச்சு, தைர்யத்துடன்,

"மாமா! என்னை மன்னிக்கவேண்டும். ஆனால் இனி என்னால் இவ் விஷயத்தை என் மனதில் வைத்துக்கொண்டிருக்க முடியவில்லை. சென்ற ஒரு வருஷகாலமாக, நான் உங்களுடைய பெண் கமலத்தின்மேல் காதல்கொண்டு, படும் அவஸ்தை தெய்வத்துக்குத்தான் தெரியும். வாஸ்தவமே! நான் மிகவும் ஏழை. ஆனபோதிலும் என் ஆசையை என்னால் கட்டுப்படுத்தமுடியவில்லை." என்று மிகவும் நம்பத்தக்க விநயத்துடன் கூறினான்.

அச்சமயம், அங்குவந்த காமாக்ஷி, அவன் பேசியதைக் கேட்டுக்கொண்டே வந்ததால், கோபத்துடன்,

"சீச்சீ! சண்டாளா! நீ அவள்மேல் காதல் கொள்ளவில்லை. அவளுக்கு வரக்கூடிய பணத்தின்மேல் ஆசை கொண்டிருக்கிறாய். அது எப்படி இருந்தபோதிலும் நீ அவளை விவாஹம் செய்துகொள்ளும் எண்ணத்தை அடியுடன் விட்டுவிடு. தூ! வெட்கமில்லா மிருகமே! நீ என்னை மோசம் செய்து பண்ணிய அட்டூழியங்களை அறிந்தும், நீ அவளை விவாஹம் செய்துகொள்ள நான் சம்மதிப்பே

னோ? உன்..." என்று மேலே பேசுமுன், சீச்சு, காமாக்ஷி தன் வலையிலிருந்து ஏற்கனவே மீட்கப்பட்டுவிட்டாளென்பதை அறியாதவனாகையால், அவளுடைய பயமற்ற சொற்களைக் கேட்டு, வியப்புற்று, இறுமாப்புடன்,

"அடியே! உஷார்! என்ன எல்லாவற்றையும் மறந்துவிட்டாயோ?" என்று விரட்டினான். ஆனால் காமாக்ஷி, சற்றும் லக்ஷியம் செய்யாமல்,

"சீச்சீ! வாயைமூடு! 'அடி! கிடி!' என்று நீ பேசுவாயாகில், உன் பற்களை உடைத்துவிடுவேன். ஈவு இரக்கமற்ற பாவி! இனிமேல், நான் உன்னிடம் பயப்படவேண்டியது அவசியமில்லை. அடே! இப்பொழுதே சொல்லிவிட்டேன். நீ இங்கு மேலும் வம்பு செய்தால், வீணாய் மரியாதைகெட்டுப்போவாய்." என்று அடக்க இயலாத வெறுப்புடன் இகழ்ந்துபேசவே, சீச்சு ஒன்றும் அறியாமல் திகைத்து நின்றான். பிறகு,

"காமாக்ஷி! உனக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதென்று நினைக்கிறேன். அடியே! நான் உன் விஷயங்களை உன் நாதரிடம் சொல்லிவிடும்பக்ஷத்தில் உன் கதி என்னவாகும்?" என்று மறுபடியும் பயமுறுத்த, காமாக்ஷி,

"அடே! எல்லாம் அவருக்கு ஏற்கனவே தெரியும். நீ அவருக்குச் சொல்லவேண்டிய அவசியமில்லை இன்னும், இதுவரையில், நீ என்னை மருட்டி என்னிடமிருந்து பணம் பறிக்கச் சாதகமாயிருந்த அப்படம் என்னிடமிருக்கிறது. இதோ பார்." என்று சொல்லி அப் படத்தைத் தன் மடியிலிருந்து எடுத்துக் காட்டவே, சீச்சு திடுக்கிட்டான். ஆனால், உடனே தன் குழப்பத்தை மறைத்துக்கொண்டு, பரிஹாஸமாய்ச் சிரித்துவிட்டு,

"எங்கே! தைரியமிருந்தால், அதை உன் பர்த்தாவிடம் காண்பி." என்றான்.

"சீச்சீ! மடையா! ஆனால், இதுவரையில், அவர் இதைப் பார்க்கவில்லை என்று நினைத்துக்கொண்டிருக்கி



றாய்?" அவரே, இதை உன் அறையிலிருந்து கண்டெடுத்தவர். இன்னும் இதில் நீ விஷமம் செய்ய எத்தனிப்பதில் பிரயோஜனமில்லை. ஏனென்றால், இன்று காலை, நீயும் அந்த அயோக்கிய சிகாமணியாகிய உன் தோழனும் இப் படத்தைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்த ஒவ்வொரு வார்த்தையையும் அவர் கேட்டுக்கொண்டிருந்தார். அடே! உன் அதிர்ஷ்டம் அவர் மிகவும் உதாரகுணமுள்ளவராகையால் பிழைத்தாய்! இல்லாவிட்டால் நீ செய்த காரியத்திற்கு உன் மண்டையை உடைத்திருப்பார். தூ! சண்டாளா! இனிமேல் இவ்வீட்டிற்குள் நுழையாதே. நீ தின்பது சோறாயிருந்தால் உடனே வெளியே போய்விடு. என்று சொல்லொணா வெறுப்புடன் சொல்லிவிட்டுக் கோபாலய்யரைப் பார்த்து, ஏதோ காமாக்ஷி சொல்லுந் தறுவாயிலிருந்தாள். ஆனால் சீச்சு, அவளைப் பேசமுடியாமல் தடுத்து,

"அடியே! உன் பர்த்தாவுக்கு அவ்வளவு தைரியமுண்டென்று எனக்குத் தோன்றவில்லை. வாஸ்தவம்! இனி நான் என் அயோக்கியத்தனத்தை ஒளிப்பதில் பிரயோஜனமில்லை. இன்னும், நீ என்னிடமிருந்து தப்பிவிட்டாய் என்பதையும் ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால், நான் கமலத்தை விவாஹம் செய்துகொள்ள நீ சம்மதிக்கமாட்டேனென்றாயே பைத்தியமே! இதில் உன் சம்மதத்தை நான் சற்றும் எதிர்பார்க்கவில்லை. தவிர, இவ் விஷயம் இப்பொழுது வெளியாய்விட்டதால், உன் புருஷரும் இதற்கு இணங்கமாட்டாரென்பது நிச்சயம். ஆனால், இவ்வளவு இடையூறுகளையும் லக்ஷியம் செய்யாமல், நான் கமலத்தைப் பலாத்காரமாய் விவாஹம் செய்துகொள்ள முடியும் என்பதை மனதில் வைத்துப் பேசு. அடியே! நீ தப்பித்துக்கொண்டபோதிலும், அவள் என்னிடம் மாட்டிக்கொண்டிருக்கிறாளென்பதை நீங்களிருவரும் இதற்குள் ஊகித்திருப்பீர்கள்." என்று சொல்லி கர்வத்துடனும், திமிருடனும், கோபாலய்யரை உற்றுநோக்கியவண்ணம்,

"ஐயா! உங்களுடைய பதிலை எதிர்பார்க்கிறேன்." என்றான்.

அச்சமயமிருந்த கோபாலய்யருடைய மனோநிலைமையை நாம் வர்ணிக்கவேண்டுமோ? அவர், அதற்குள் சீச்சு கொடிய அயோக்கியனென்பதைக் கண்டுகொண்டாராகையால், தாம் தம் கோபத்தை மீறவிட்டு, அவனைத் தண்டிக்கும்பக்ஷத்தில், அவன் சற்றும் ஈவு இரக்கமின்றி கமலத்தின்மேல் தன் வஞ்சத்தைக் தீர்த்துக்கொள்ளுவானென நடுங்கிப் பேசாமலிருந்தார். ஆனால் சீச்சு, தம் அருமைப் புதல்வியை மனைவியாக்கிக்கொள்ளத் தீர்மானித்துவிட்டதைக் காணவே, மனங்குழம்பத் திகைத்து நின்றார். சீச்சு, மறுபடியும் அவரை நோக்கி,

"உங்களுடைய பதிலைச் சீக்கிரம் எதிர்பார்க்கிறேன்." என்று கூறவே கோபாலய்யர், வியக்கத்தக்க சாந்தத்துடன்,

"சீச்சு! நீ இதுவரையில் என் வீட்டில் செய்த அக்கிரமங்கள் போதாதென்று இதையும் செய்ய நிச்சயித்துவிட்டாயோ?" என்று வினவினார்.

சீச்சு:—"ஐயா! நான் இப்படிக் கண்டிப்பாய்ப் பேசவேண்டியிருப்பதைப்பற்றி வருத்தப்படுகிறேன். ஆனால், கமலத்தை எப்படியாவது விவாஹம் செய்துகொள்ளத் தீர்மானித்துவிட்டேன்.

கோபா:—"அடே! வேண்டாம். என் கோபத்தை கிளப்பாதே."

சீச்சு:—"ஓய்! நான் உம்முடைய கோபத்திற்கு கிஞ்சித்தும் பயப்படவில்லை. ஏனென்றால், நீர் என்னைத் தொடவும் சக்தியற்றவரென்பது எனக்கு நன்றாய்த் தெரியும் அப்படியே உமக்குச் சக்தியிருந்தபோதிலும், அதைச் செய்ய நீர் துணியமாட்டீர்."

இதைக் கேட்டதும், கோபாலய்யருடைய முகம் சிவந்தது. அவர் தம்மைத் தாமே கட்டுப்படுத்தமுடியாதவராய், எல்லாவற்றையும் மறந்து, அப்படியே புலிபோல் சீச்சுவின் மீது பாய்ந்து, தம் இடது கரத்தால், அவன் குடுமியைப் பற்றி அதை ஆத்திரத்துடன் அப்படியும் இப்படியும் குலுக்கியவண்ணம், தம் வலது கரத்தால் அவனுடைய கன்னங்களில் பளீர் பளீர் என்று பலமாக அறைந்தார். இதைக் கண்டதும் காமாக்ஷி அநுபவித்த சந்தோஷத்திற்களவில்லை. அவள் இதுதான் சமயமென்று நினைத்து, வந்ததுவரட்டுமென்று ஒரு மூலையில் காணப்பட்ட ஒரு துடைப்பத்தை எடுத்துக்கொண்டு வலி பொறுக்க முடியாமல் 'ஐயோ! ஐயோ!' என்று அலறிக்கொண்டிருந்த சீச்சுவின் முதுகில் தன் முழுச் சக்தியையும் பிரயோகித்து, தன் வயிற்றெரிச்சல் தீர, அடிக்க ஆரம்பித்தாள். அச்சமயம் சீச்சுவின் அலங்கோல நிலைமையைக் கண்ட எவரும் சிரிக்காமலிருக்கமுடியாது. தன் கன்னங்களிலும், முதுகிலும், அடி மாறிமாறி விழவே, 'ஐயோ! அப்பா!' என்று வர்ணிக்க இயலாத அவஸ்தையுடன், தன் சரீரத்தை நெளித்துக்கொண்டான். ஆனால், சற்று நேரத்திற்கெல்லாம், அதுவரையில் மறைவில் நின்றுகொண்டு, அங்கு நடந்த எல்லாவற்றையும் கவனித்துவந்த கமலம், பதறிய மனதுடனும், நடுங்கும் கைகால்களுடனும், அங்கு ஓடிவந்து,



"ஐயோ அப்பா! ஐயோ சித்தி! என்ன காரியம் செய்துவிட்டீர்கள்? என் கதி என்னவாகும்?" என்று வீறிட்டலறவே, கோபாலய்யரும் காமாக்ஷியும், திடுக்கிட்டு, தாங்கள் செய்துவிட்ட காரியத்தின் பலனைச் சீச்சு என்னசெய்துவிடுவானோ என்று நடுங்கிப் பிரமித்து, ஒன்றும் தெரியாமல், மரம்போல் நின்றார்கள்.

இனி, சீச்சுவைக் கவனிப்போம். அந்த ஒரு வினாடி நேரத்திற்குள் அவனுடைய முகம் பயங்கரமாய் மாறிவிட்டது. தன் குடுமியை முடிந்துகொண்டே, ஆவேசத்துடன், கோபாலய்யரைக் கொடூரப் பார்வையுடன் நோக்கிய வண்ணம்,

"ஓய்! உம்மை லேசில் விடேன். இதோ இன்னும் ஒருமணி நேரத்திற்குள் உம்முடைய பெண் கைது செய்யப்படாவிட்டால் என் பெயர் சீச்சுவல்ல." என்று கூச்சலிட்டவாறு அவ்வறையை விட்டு வெளியே செல்ல, கமலம்,

"அப்பா! அப்பா! அவனைச் சமாதானப்படுத்துங்கள்." என்று கல்லுங்கரையும்விதம் கெஞ்சவே, கோபாலய்யர், என்னசெய்வதென்று தெரியாமல், தம் கோபத்தின் பலனைத் தாம் செய்துவிட்ட கார்யத்திற்காக, தம்மைத் தாமே வெறுத்தவராய், ஒரே தாவலாய்த் தாவி, சிச்சுவின் கரங்களைப் பிடித்துக்கொண்டார். அவன்,

"ஓய்! என் கையை விடும்." என்று திமிறிக்கொண்டே, "உமக்குத்தான் பலமிருக்கிறதென்று நினைத்தல்லவோ என்னை அடித்துவிட்டீர்? நான் உம்மைத் திருப்பி அடிக்காமலிருந்ததற்குக் காரணம் எனக்குச் சக்தியில்லை என்பதல்ல. இருக்கட்டும். இரு...." என்று அவன் மேலே பேசுமுன், கோபாலய்யர், ஆத்திரத்துடன்.

"டேய்! நீ இப்படிப் பயமுறுத்துவதில் பிரயோஜனமில்லை. நீ காமாக்ஷியை மருட்டிவந்ததுபோலவே என் பெண்ணையும் பயமுறுத்துகிறாயென்று நினைக்கிறேன். வாஸ்தவத்தில் கமலம், போலீஸாரால் கைதுசெய்யப்பட, ஒரு குற்றத்தையும் செய்திருக்கமாட்டாள்." என்றார். சிச்சு,

"ஓஹோ! அப்படியா நினைத்துக்கொண்டிருக்கிறீர்? ஏற்கனவே போலீஸார், அவளைச் சந்தேகித்து, அவளைத் தங்கள் கண்பார்வையிலேயே வைத்துக்கொண்டிருப்பதை நீர் அறியவில்லைபோலும். ஓய்! தற்சமயம் இவ் வீட்டின் சமீபத்தில் வட்டமிட்டுக்கொண்டிருக்கும் அத்துப்பரிபவனிடம் நான் ஒரு வார்த்தை சொல்லிவிடும்பக்ஷத்தில், அவள் உடனே கைது செய்யப்படுவாள். ஆஹா! உம்முடைய பெண் ஒருகுற்றத்தை செய்திருக்கமாட்டாளென்று சொல்லுகிறீர்? அவள் லேசான குற்றத்தைச் செய்யவில்லை. அவள் சிசுஹத்தி செய்தவள்." என்று சொல்லி முடிக்குமுன், கமலம்,

"அடா பாபி!" என்று வீறிட்டலறி, மடேரென்று தரையில் விழுந்து மூர்ச்சையானாள்.

---



## அத்தியாயம் 12.

---

கமலம் மூர்ச்சையுற்று விழுந்ததும், கோபாலய்யரும் காமாக்ஷியும் பரபரப்புடனும் கவலையுடனும் பலவித சிகிச்சைகளைச் செய்யலானார்கள். ஆனால் சிச்சு, சற்றும் அவர்களுடைய மனோநிலைமையை லக்ஷியம் செய்யாமல், கோபாலய்யரைப் பார்த்து,

"ஐயா! இன்னும் உமக்குச் சந்தேகமிருக்க முடியாது. மீட்டும் 24 மணி நேரத்திற்குள் நான் இங்கு வருவேன். அப்பொழுது நீர் அவளை எனக்கு விவாஹம் செய்துகொடுப்பதாக வாக்களிக்கவேண்டும். தவறும்பக்ஷத்தில் நான் என்ன செய்வேனென்பது உமக்கே தெரியும். சரி; நான் போகிறேன்." என்றுசொல்லிவிட்டுத் துரிதமாய் வெளியே போய்விட்டான்.

சிச்சு சென்றதும், கோபாலய்யர், தம் புதல்வி மூர்ச்சை தெளிந்து அவள்பேச எப்படியும் கால்மணி நேரமாவது ஆகுமென்று நினைத்து, அவளை ஒரு கட்டிலில் படுக்கவைத்துவிட்டுக் கவலையின் மிகுதியால் கைகால்கள் சோர்வுற்று ஒரு நாற்காலியுட்கார்ந்துகொண்டார். உடனே அவருடைய மனதில் பலவித சந்தேகங்கள் தோன்றி அவரை வதைக்கலுற்றன. நடுவில் ஏதோ நினைத்துக்கொண்டவர்போல் எழுந்து தம் அறைக்குச் சென்றார். அங்கு ஒரு மேஜைமேல் காணப்பட்ட பல வர்த்தமானப் பத்திரிகைகளிலிருந்து ஒன்றை எடுத்து அதை வாசிக்க ஆரம்பித்தார். அவர் வாசித்த சமாசாரம் நம் நேயர்களறிந்ததே. இருந்தபோதிலும் இங்கு மறுபடியும் எழுதுவோம். அது கீழ்க்கண்டவாறு:—

"சென்னை,
23—11—27.

நேற்று இவ்வூர்.......தெருவில், ஒரு வீட்டில், பிறந்து 25 தினங்களிருக்கக்கூடிய ஒரு ஆண்குழந்தை கொல்லப்பட்டுக்கிடந்தது. பிறகு நடந்த சவப்பரீக்ஷையிலிருந்து

அதை யாரோ வேண்டுமென்று கழுத்தை முறித்து கொன்றிருக்கவேண்டுமென்பது வெளியாயிற்று. போலீஸார் விசாரித்துக்கொண்டிருக்கிறார்கள்.''

இதை வாசித்ததும் மறுபடியும் கோபாலய்யருடைய மனம் பதறியது. கைகள் நடுங்க ஆரம்பித்தன. பலதரம் பெருமூச்செறிந்தார். பிறகு மன அமைதியற்று உலாவிக்கொண்டே சிந்திக்கலானார். ஆனால் சற்று நேரத்திற்கெல்லாம் அவருடைய தங்கை பிள்ளை பாலகிருஷ்ணன் அங்கு வரவே அவனை யழைத்துக்கொண்டு மறுபடியும் கமலம் இருந்த அறைக்குச் சென்றார். பாலகிருஷ்ணன், நடந்த எல்லாவற்றையும் கேட்டறிந்ததும், திகைத்து நின்றான். பிறகு, கோபாலய்யரைப் பார்த்து தடுமாற்றத்துடன்,

''மாமா! இது மிகவும் மோசமாயிருக்கிறதே. சரி; இப்பொழுது நீங்கள் என்ன செய்வதாயுத்தேசம்?'' என்று கேட்க, கோபாலய்யர்,

''எனக்கொன்றும் தோன்றவில்லை. கிட்டு! வாஸ்தவத்தில் நம் கமலம் இப்பேர்பட்ட கார்யத்தைச் செய்திருப்பாளென்று நீ நம்புகிறாயோ?'' என்று கேட்க,

''மாமா! இதை நான் நம்பவேமாட்டேன். ஆனால் கமலம் இங்கு வந்ததிலிருந்து, அவளுடைய நடவடிக்கைகளையும் பயந்த பார்வையையும் நினைக்க, அவள் அக் குழந்தையின் கொலையில், நான் எதிர்பார்த்தவிதம், சம்பந்தப்பட்டிருக்கவேண்டும். அது எப்படி இருந்தபோதிலும் அவள் மூர்ச்சை தெளிந்து எழுந்து சொல்லக்கூடியதைக் கேட்குமுன் நாம் வீணில் கவலைப்படவேண்டியதில்லை. இன்னும் நான் இதைப்பற்றி ஏற்கனவே இத்துப்பறியும் கார்யத்தில் மிகுந்த ஊக்கமும் சாமர்த்தியமுமுள்ள சபேசன் என்ற என் ஆப்த சிநேகிதனொருவனிடத்தில் பேசியிருக்கிறேன். தற்சமயம் அவன், சிலதினங்களுக்குமுன் மடத்துத்தெருவில் நடந்த, வக்கில் தாண்டவம்ஐயருடைய கொலையைப்பற்றி விசாரித்துக்கொண்டிருக்கிறான். அப்படியே சந்தர்ப்ப சாக்ஷியங்கள் கமலத்துக்கு மிகவும் விரோ



தமாயிருந்தபோதிலும் வாஸ்தவத்தில் அக்குழந்தையைக் கொன்ற பேர்வழியை என் நண்பன் கண்டிப்பாய்க் கண்டு பிடித்துவிடுவான். ஆனால் அதுவரையில் நாம் இந்தச் சீச்சு விஷமம் செய்யாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். ஏனெ.......'' என்று அவன் பேசிக்கொண்டிருக்கையில், கமலம், தன் கண்களைத் திறந்து பக்கத்தில் நின்றுகொண்டிருந்த தன் காதலனையும் தந்தையையும் காணவே, வருத்தம் தாங்காமல் தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்தாள். அவ்விருவரும் ஆவலுடன் அவளையணுகி அன்பொழுகும் சொற்களால் சமாதானப்படுத்தினார்கள். பாலகிருஷ்ணன், பிரியத்துடன் அவளுடைய தோளைத் தொட்டு,

'' கமலம்! நீ சிறிதும் பயப்படவேண்டாம். அப்பாபி என்ன சொன்னபோதிலும் நாங்கள் அதை நம்பவேமாட்டோம். ஆனால், நீ உடனே உள்ள விஷயத்தை ஒளிக்காமல் சொல்லிவிடவேண்டும்.'' என்று கெஞ்ச, அப் பெண்மணி, கொஞ்சம் தைர்யமடைந்து, மெல்ல எழுந்து உட்கார்ந்துகொண்டு,

''இனி நான் எதையும் ஒளிக்கப்போவதில்லை. உடனே எல்லாவற்றையும் சொல்லிவிடுகிறேன். ஆனால், முதலில் எனக்குக் குடிக்கக் கொஞ்சம் ஜலம் வேண்டும்.'' என்று சொல்லவே பக்கத்திலிருந்த காமாக்ஷி, உடனே சென்று, கொண்டுவந்து கொடுத்த வென்னீரை ஆவலுடன் பருகிவிட்டுக் கீழ்க்கண்டபடி சொல்லிமுடித்தாள்:—

'' என்னைத் தன் தங்கைபோலவே பாவித்துவந்த என் தோழி ஒருவள் சென்னையில் நான் போய்க்கொண்டிருந்த அதே பள்ளிக்கூடத்தில் வாசித்துவந்தாள். அவள் தன் விவாஹம் நடந்த ஒரு வருஷத்திற்குள் புருஷனை இழந்துவிட்டதால் அவளுடைய தந்தை கொஞ்சகாலம் அவளைப் படிக்கவைத்துப் பிறகு மறு விவாஹம் செய்துவைக்க நிச்சயித்தார். அவள் சென்ற ஒருவருஷகாலமாக, ஒருவர்மேல் பிரியப்பட்டு, உலகத்தில் பேதைப் பெண்களின் கர்ப்பை அழிப்பதே கார்யமாயுள்ள பல சண்டாளர்களுண்டென்ப

தைச் சந்தேகிக்காமல், தன் காதலின் மிகுதியால் அப்பாபி செய்துவந்த கார்யங்களெல்லாவற்றிற்கும் இணங்க, அதன் பலனைக் கர்ப்பமாய்விட்டாள். கடைசியில் அப்பாபி, தன்னை விவாஹம் செய்துகொள்ளுவதாய்ப் பாசாங்கு செய்து, மோசம் செய்துவிட்டானென்பதை அறிந்ததும் அவள் பட்ட கஷ்டத்தை நான் சொல்லமுடியாது. ஆனால் தான் இனி தன் ரஹஸ்யத்தை மறைக்கமுடியாதென்று உணர்ந்தபிறகுதான் விஷயத்தை என்னிடம் ஒப்புக்கொண்டாள். பிறகு பலதரம் தற்கொலை செய்துகொள்ள முயன்றாள். ஆனால் நான் தடுத்துக்கொண்டேவந்தேன். கடைசியில் அவளுடைய கருப்பத்தின் ஏழாவது மாதத்தில் நல்லவேளையாய் அவளுடைய தந்தை அவசர கார்யமாய்ப் பம்பாய் போகும்படி நேரிட, அவள் வீட்டிலிருந்த ஒரு சமையற்காரப் பாட்டியின் உதவியைக்கொண்டு பிரஸவத்தை ரஹஸ்யமாய் நடத்திவிடத் தீர்மானித்தோம். இன்னும், அவளுடைய தந்தை திரும்பிவர 3 மாதகாலமாகுமென்பதை நாங்கள் அறிந்துகொண்டதால் அவரைப்பற்றிய கவலை தீர்ந்துவிட்டது. ஆனால் அதேவீட்டில் பிரஸவத்தை நடத்துவது பிசகென நினைத்து, திருவல்லிக்கேணியில் ஒரு சந்திலிருந்த ஒரு சிறு வீட்டை வாடகைக்கு வாங்கிக்கொண்டு சமயம் சமீபித்ததும் அவளை அங்குக் கொண்டுபோய்விட்டோம். முடிவில் ஒரு வழியாய் எல்லாம் முடிந்து அவள் ஒரு ஆண் குழந்தையைப் பெற்றாள்.

தாத்தாவும் பாட்டியும் சற்றும் சந்தேகிக்க முடியாத விதம் நான் அடிக்கடி அவளைப் போய் பார்ப்பதும், இன்னும் அவளுக்கு வேண்டிய பல உதவிகளைச் செய்வதுமாயிருந்தேன். இவ்விதம், இரண்டு மூன்று வாரங்கள் கழிந்தன. அதன் முடிவில் ஒருநாள் மாலை 6 மணி சுமாருக்கு அவளுடனிருந்த அக்கிழவி, என்னிடம் ஒரு கடிதத்தைக் கொண்டுவந்து கொடுத்தாள். அதில் என் தோழி, தான் இனித் தன் உயிரை வைத்துக்கொள்ள இஷ்டப்படாததால் அன்று தற்கொலை செய்துகொள்ள நிச்சயித்துவிட்டதாகவும், தன்னை மோசம் செய்து கெடுத்த அப்பாபியை தன்



குழந்தையைக் கொண்டுபோய் வளர்க்கும்படி கேட்டுக்கொண்டிருப்பதாகவும் எழுதியிருந்தாள். அதை வாசித்ததும், நான் திகிலடைந்து எப்படியாகிலும் அவளைக் காப்பாற்றும்பொருட்டு, உடனே அவ்வீட்டிற்குச்செல்ல நினைத்தேன். அச்சமயம் பிச்சு தாத்தாவிடம் பேசிக்கொண்டிருந்தான். நான் அவரிடம் கொஞ்சம் வெளியே போய்விட்டு வருவதாக உத்தரவு பெற்றுக்கொண்டு போனேன். கடைசியில் நான் அவ்வீட்டிற்குச் சென்றபொழுது, என் தோழியுடன் அவளைக் கெடுத்த அப்பாபியும் இருந்தான். அவன், என்னைக் கண்டதும், என் தோழிக்கு ஜன்னி கண்டிருப்பதாகவும், அந்நிலைமையில் அவளைவிட்டுப் போக தனக்கு மனமில்லையாகையாலும், உடனே சென்று ஒரு டாக்டரை அழைத்துவரும்படி என்னைக் கெஞ்ச, நான், அவன் சொன்னதை வாஸ்தவமென்று நம்பி, மறுபடியும் வெளியே போய்விட்டேன்.

பிறகு, நான் பல டாக்டர்கள் வீடுகளுக்குப் போய்த் தேடியும் ஒருவரும் அகப்படவில்லை. தவிர, அதற்குள் என் மனதில் ஒருகால் என் தோழி ஏற்கனவே விஷத்தைத் தின்றிருப்பாளென்ற சந்தேகம் தோன்றிவிட்டது. என்ன செய்வதென்று தெரியாமல் கடைசியில் மேலும் அலைந்துகொண்டிருப்பது பிசகென நினைத்து, அவள் சாகும் சமயம் அவள் பக்கத்திலிருக்கவேண்டுமென்ற ஆவலைக் கட்டுப்படுத்த முடியாமல், துரிதமாய் மறுபடியும் அவ்வீட்டிற்குச் சென்றேன். ஆனால், நான் அதற்குள் நுழைந்ததும் திடுக்கிட்டேன். ஏனென்றால், அதில் என் தோழியாவது அச்சண்டாளனாவது காணப்படவில்லை. குழந்தைமட்டும் தரையில் கிடக்கவே, வியப்புற்று அதையணுகியபொழுது அது கொல்லப்பட்டிருப்பதைக் கண்டேன். அச்சமயம், நான் பட்டபாடு தெய்வத்துக்குத்தான் தெரியும். என் சரீரத்தில் திடீரென்று இரத்த ஓட்டமே நின்றுவிட்டாற்போலிருந்தது. அவ்வறையில் ஒரு விளக்கு எரிந்துகொண்டிருந்தது. கொஞ்சநேரம் திகைத்து அசைவற்று நின்றுகொண்டிருந்தேன். ஆனால் என் கண்கள்மட்டும் தரையில்

கிடந்த சுவர்ணவிக்கிரகம்போன்ற அக்குழந்தையை நோக்கியவண்ணமிருந்தன. பிறகு, மனந்தாளாமல் எல்லாவற்றையும் மறந்து, அதை எடுத்து மடியில் போட்டுக்கொண்டு அழவாரம்பித்தேன். அந்நிலைமையில் நான் கண்டுபிடிக்கப்பட்டால் மிகவும் அபாயத்திற்கிடமாகுமென்பதை நான் உணரவில்லை.

ஆனால், சற்றுநேரத்திற்கெல்லாம் அவ்வீட்டிற்குள் யாரோ நுழைந்து நானிருந்த அறையை நோக்கி வரும் சப்தம் கேட்கவே, திடுக்கிட்டு எழுந்திருக்கும் தறுவாயிலிருந்தேன். ஆனால், நான் அப்படிச் செய்யுமுன், பார்த்ததும் நடுங்கத்தக்க பயங்கரமுகத்தோற்றத்துடன் ஒருவன், என்முன் நின்று கடுமையான பார்வையுடன் என்னை நோக்கியவண்ணம்,

“அடி சண்டாளி! கடைசியில் குழந்தையைக் கொன்றுவிட்டாய்? ஆனால் வெட்கமில்லாமல் விபசாரம் போனவள் கொலைசெய்வது சகஜமே. நான் சென்ற ஒருமாதகாலமாய் உங்கள்மேல் சந்தேகப்பட்டு கவனித்துக்கொண்டே வந்தேன். நான் துப்பறியும் இலாகாவைச் சேர்ந்தவனென்பதை நான் சொல்லவேண்டியதில்லை. சரி; சரி; வம்புபண்ணமல் குழந்தையை எடுத்துக்கொண்டு என்னுடன் போலீஸ் ஸ்டேஷனுக்கு வா.” என்று கண்டிப்பாய்ச் சொன்னதும், நான் பட்ட பாட்டை நீங்களே யூகித்துக்கொள்ளலாம்.

நான் நிரபராதியென்றும், அக்குழந்தை என்னுடையதல்லவென்றும் சொல்லி என்னைக் காப்பாற்றும்படி நான் எவ்வளவோ கெஞ்சியும், அவன், சற்றும் லக்ஷியம் செய்யாமல்,

“சீச்சீ! அநாசாரக்கழுதை! உன் மூட்டையெல்லாம் யாரிடம் அளக்கிறாய்? பேசாமல் எழுந்து வா.” என்று கண்டபடி பேசிக்கொண்டே என்னைப் பலாத்காரமாயிழுக்க முயலவே, எனக்குண்டான கோபத்திற்களவில்லை. அதுவுமன்றி, நான் எப்படியாகிலும் அவனிடமிருந்து தப்பித்துக்



கொள்ளாதபக்ஷத்தில் அவசியம் போலீஸ் ஸ்டேஷனுக்கு அக்குழந்தையுடன் போகவேண்டிவருமென்பதை அறிந்ததும், அப்படிச் செய்யும்பக்ஷத்தில் அதனால் வரக்கூடிய அவமானத்தைக்கண்டு நடுங்கியும் இன்னது செய்வதென்று அறியாதவளாய்க் கொஞ்சநேரம் திகைத்து வாயைத்திறக்கவும் சக்தியற்றவளாய் யமனைப்போல் காணப்பட்ட அத்துப்பறிபவனை யுற்றுநோக்கியவண்ணமிருந்தேன். அவன் மேலும் அட்டஹாசம் செய்து,

“என்னடி இழிந்தவளே! என்ன யோசிக்கிறாய்? என்னையும் உன் மாயவலையில் இழுக்க நினைக்கிறாயோ? தூ! திருட்டுக்கள்ளி!” என்று உதாசினமாய்ப் பேசிக்கொண்டு என் கைகளைப் பிடிக்கவே, கோபத்தில் என்ன செய்கிறோமென்பதையுமுணராமல், பக்கத்திலிருந்த ஒரு குழவியையெடுத்து ஓங்கி அவன் மண்டையில் அடித்தேன். அவன் “ஐயோ!” என்று அலறியவண்ணம் தரையிலுட்கார்ந்துவிட்டான். அப்பொழுது அவ்வளவு தைர்யமும் பலமும் எனக்கு வந்ததை நினைக்க, இன்னும் ஆச்சர்யமாயிருக்கிறது.

இதற்குள் மணி 10க்கு மேலாய்விட்டதாலும், ‘ஜோ’ என்று ஆரவாரத்துடன் மழை பெய்துகொண்டிருந்ததாலும், அவ்வீட்டிற்குள் நடந்த சச்சரவை எவரும் கவனிக்கவில்லை. நிற்க, நான் சொன்னவிதம் அவன் வலி பொறுக்கமுடியாமல் என்னை விட்டுவிடவே, வெளியே ஓடுமெண்ணத்துடன், ஓரே தாவலாய்த் தாவினேன். ஆனால் அப்பாவி பாய்ந்து என் பின் காலைப் பற்றிக்கொள்ளவே, நானும் மட்டென்று தரையில் விழ, பக்கத்திலிருந்த ஒரு பெட்டியின்மேல் என் மண்டையடிபட்டு என் சுயநினைவை யிழந்தேன். நான் மறுபடியும் அதையடைந்தபொழுது, என் கைகால்கள் சற்றும் அசைக்கமுடியாதவகையில் கட்டப்பட்டிருப்பதையும், அப்பாவி தன் கண்களில் கோபம் ஜ்வலிக்க என்னை யப்படியே எரித்துவிட நினைத்தவன்போல் நின்றுகொண்டிருப்பதையும் காண நடுநடுங்கி அவனைப்பார்க்கவும் பயந்து என் கண்களை யிறுக மூடிக்கொண்டேன். அவன்,

“அடியே! நீ என்னை அடிக்கவும் துணிந்துவிட்டாயே. இரு; இரு; போலீஸ் ஸ்டேஷனுக்குப் போனதும் உன் தோலை உரித்துவிடுகிறேன்.” என்று கூறிவிட்டுத் தன் பற்களை நறநறவென்று கடித்தான்.

நான் இனித் தப்ப வழியில்லையென்று நினைத்து, நான் படவேண்டிய பாக்கி அவமானத்தையும் கஷ்டத்தையும் நினைக்கவே, மூச்சுவிடவும் முடியாமல் கைகால்கள் சோர்வுற்றுச் சவம்போலானேன். அச்சமயம் அவ்விடத்தை நோக்கி யாரோ வரும் சப்தம் கேட்க, என்னையறியாமலே வெளிப்பக்கம் தலையைத் திருப்பிப் பார்த்தபொழுது, அப்படி வந்தது சிச்சு என்பதைக் கண்டேன். உடனே என் ஹிருதயம் துள்ளிக்குதித்ததுபோலிருந்தது. ஆவலுடன் அவனைப் பார்த்து, என்னைக் காப்பாற்றும்படி மன்றாடினேன். அவன் எனக்குத் தைரியம் சொல்லியவண்ணம், என் பக்கத்தில் நின்றுகொண்டிருந்தவன்மீது பாய்ந்து, தன் மேல் அங்கவஸ்திரத்தினால் அவன் கைகால்களைக் கட்டிவிட்டுத் தன் கைக்குட்டையால் அவன் வாயையும் அடைத்துவிட்டான். அச்சமயம் எனக்குண்டான சந்தோஷத்தை என்னால் எடுத்துச்சொல்ல முடியாது. ஆனால் சிச்சுஅவ்விதம் அங்குவந்தகாரணம் எனக்கு இன்னும் தெரியவில்லை. அது எப்படியிருந்தபோதிலும், அவன் அச்சமயம் என்னைக் காப்பாற்றுமலிருக்கும்பக்ஷத்தில் தற்சமயம் நான் காராக்ருஹத்திலிருப்பேனென்பதில் சந்தேகமில்லை. சிச்சு, அத்தடியனைக் கட்டி மூட்டைபோல் உருட்டிவிட்டு, என்னைப் பார்த்து,

“கமலம்! இவன் துப்பறிபவனல்லவோ? ஆஹா! இது யாருடைய குழந்தை? அடாடா! இது கொல்லப்பட்டிருக்கிறதே! ஏண்டி! என்ன காரியம் செய்துவிட்டாய்? அடபாபமே? நான் தற்செயலாய் இப்படி இங்கு வராமலிருந்தால் உன் கதி என்னவாயிருக்கும்? வா; வா; இங்கு நாம் தமதிப்பது பிசகு.” என்று பரபரப்புடன் சொல்லவே, இருவரும் வெளியே ஓடினோம். ஆனால் அதற்குள் எப்படியோ அத் துப்பறிபவன், தன் வாயில் அடைக்கப்



பட்டிருந்த துணியை எடுத்துவிட்டு அடக்கமுடியாத கோபத்துடன்,

“அடியே! நீ எங்கே போனாலும் உன்னை விடமாட்டேன். எப்படியாகிலும், உன்னைக் கண்டுபிடித்து, உன்னை அவமானப்படுத்தாமல் விடேன்.” என்று சபதம் செய்துகொண்டான். ஆனால் அதை நாங்கள் சற்றும் லக்ஷியம் செய்யாமல், துரிதமாய் வீதியையடைந்து, ஒரு வண்டியைப் பிடித்துக்கொண்டு, வீட்டை நோக்கிச் சென்றோம். வழியில் சிச்சு, இனி நான் சென்னையிலிருப்பது மிகவும் அபாயத்திற்கிடமென்றும், சீக்கிரம் கனகபுரிக்குப் போய்விடவேண்டுமென்றும் சொல்ல, நானும் நியாயமென நினைத்தேன். கடைசியில் நாங்கள் வீட்டை அடைந்தபொழுது, ஏற்கனவே தாத்தாவும் பாட்டியும் என்னைப்பற்றிக் கவலைகொண்டு தேட ஆரம்பித்துவிட்டார்கள். நான் அவர்களுக்கு நம்பும்படி பல சால்ஜாப்பு சொல்லிவிட்டு, என்னறைக்குப் போகும்பொழுது, சிச்சு என்னைப் பின்பற்றி வந்து உடனே உங்களுக்குக் கடிதமெழுதும்படி சொல்ல, அப்படியே செய்வதாய் வாக்களித்தேன். அவன் போனதும் அரைமணி நேரம்வரையில் பைத்தியம் பிடித்தவள்போல் நின்றுகொண்டிருந்தேன். பிறகு சாப்பிடவும் மனமில்லாமல் படுத்துவிட்டேன். அப்பப்பா! அன்று இரவு முழுமையும் நான் பட்ட அவஸ்தை தெய்வத்துக்குத்தான் தெரியும். எங்குத் திரும்பியபோதிலும் அத் துப்பறிபவன் நின்றுகொண்டிருப்பதுபோலிருந்தது. கடைசியில், பொழுது விடிந்ததும், தாமதமில்லாமல், உங்களுக்குக் கடிதம் எழுதினேன். சற்றுநேரத்திற்கெல்லாம், அங்குவந்த சிச்சு, தான் அன்று கனகபுரிக்குப் போவதாய்ச் சொல்ல, எப்படியாகிலும், அவ்விடத்தைவிட்டுத் தப்பினால் போதுமென்று நினைத்து, அவனுடன் வரத் தீர்மானித்தேன். பிறகு, தாத்தாவிடம் சென்று, உங்களுக்கு உடம்பு சரியாயில்லை என்றும், என்னை உடனே வரும்படி எனக்குக் கடிதம் வந்திருப்பதாகவும் சொல்லி[illegible]ம்பிவிட்டார். இவ்வளவே விஷயம்.

13773.

நான் இங்கு வந்ததிலிருந்து, சீச்சு, என் ரஹஸ்யம் தனக்கு தெரியுமென்ற தைரியத்தினால், என்னைக் காணும் பொழுதெல்லாம் கண்டபடி பேச ஆரம்பித்தான். அதுவுமன்றிச் சென்ற இரண்டுதினங்களாக, என்னைச் சென்னையில் பிடித்த, அத் துப்பறிபவன் நம் வீட்டின் சமீபத்தில் வட்டமிட்டுக்கொண்டிருக்கிறான். ஆகவே, சீச்சு அவனிடம் ஒரு வார்த்தை சொல்லிவிடும்பக்ஷத்தில், நான் உடனே கைது செய்யப்படுவேன்."

* * * * *

இனி, சபேசனைக் கவனிப்போம்.

'ஜானகி காணாமல் போய்விட்டாள்.' என்ற தந்தியை வாசித்ததும், அவனடைந்த விசனத்திற்கும் கவலைக்கும் அளவில்லை. கடைசியில், உடனே கனகபுரிக்குப் போவதெனத் தீர்மானித்தான்.

மறுநாட்காலை, அவன், ராஜேந்திரனுடைய வீட்டிற்குள் நுழைந்தபொழுது, தன் நண்பன் தன்னை ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருப்பதைக் கண்டான். அவனைப் பார்த்ததும், ராஜேந்திரன், அவனை நோக்கி ஓடிவந்து,

"சபேசா! எனக்குப் பைத்தியம் பிடித்துவிடும் போலிருக்கிறது. நான் என்னடா செய்வேன்?" என்று புலம்ப ஆரம்பிக்கவே, சபேசன், பிரியத்துடன் அவனைச் சமாதானப்படுத்தி, விஷயத்தைச் சொல்லும்படி கேட்க, ராஜேந்திரன்,

"விஷயமென்ன? நேற்று முன்னாளிரவு 11 மணியிருக்கும். நான் என் அறையில் தூங்கிக்கொண்டிருந்தேன். அச்சமயம், உன் தங்கை ராஜம் வந்து அவசரத்துடன் என்னை அழைக்கவே, எனக்குண்டான ஆச்சர்யத்திற்களவில்லை. நான் கவலையுடன் காரணங் கேட்க, அவள், சென்ற ஒருமணி நேரத்திற்கு முன்பு, என் தங்கை, கொல்லைப் பக்கம் போய்விட்டு வருவதாய்ச் சொல்லிப் போனாளென்றும், ஆனால் இன்னும் [illegible] என்றும் சொல்லவே, இருவரும் [illegible] யும் தேடினோம்.



அதற்குள் ஜானகி மாயமாய்ப் போய்விட்டாள். பிறகு, பலவிடங்களிலும் தேடினேன். ஒன்றும் பிரயோஜனமில்லை. நான் வீண் குழப்பம் செய்தால், பிறகு பேச்சிற்கிடமென்று பயந்து, வாயை மூடிக்கொண்டிருந்துவிட்டேன். பொழுது விடிந்ததும், உனக்குத் தந்தியடித்தேன். இவ்வளவுதான் விஷயம்." என்றான்.

பிறகு, கொஞ்சநேரம் வரையில், இருவரும் சபேசன் சென்னையில் கண்டுபிடித்த விஷயங்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள். அதைக் கேட்டதும், ராஜேந்திரன்,

"அப்படியா? ஆனால், நாம் மங்களம் என்ற இப் பெண்ணையும் அவளுடைய தந்தையையும் கண்டுபிடித்துவிட்டால் எல்லாம் வெளியாய்விடும். சரி; ஜானகியை மங்களத்தின் தந்தையே அபஹரித்துக்கொண்டு போயிருக்கிறானென்பதில் சந்தேகமில்லை. ஹா! சபேசா! ஒருகால், அப் பாபி, இதற்குள் என் தங்கையின் கற்பை...." என்று மேலே பேசச் சக்தியற்றுச் சொல்லமுடியாத கலவரத்துடன், தன் நண்பனை உற்றுநோக்கியவண்ணம் நிறுத்திவிட்டான். சபேசன்,

"எப்படி இருந்தபோதிலும், நாம் கவலைப்படுவதால் அடையக் கூடிய லாபமொன்றுமில்லை. வாஸ்தவம். அவன் ஜானகியைக் கெடுக்கும் எண்ணத்துடன்தான் கொண்டு போயிருக்கிறான். ஆனால், தெய்வம் அவளை அவசியம் காப்பாற்றுமென்று நம்புகிறேன். சரி; என் தங்கை ராஜம் எங்கே?" என்று கேட்க, ராஜேந்திரன்,

"ஜானகி காணாமற்போனதும், இனி இவ் வீட்டில் தனிமையிலிருப்பது பிசகென நினைத்து, உன் வீட்டிற்குப் போய்விட்டாள்." என்று விடையளித்தான். சபேசன்,

"சரி; இருக்கட்டும். நான் போய்விட்டு ஒருமணி நேரத்திற்குள் திரும்பி வருகிறேன்," என்று சொல்லிவிட்டுத் தன் வீட்டிற்குச் சென்றான். அங்குக் கோபாலய்யருடைய தங்கை பிள்ளை, பாலகிருஷ்ணன், நின்றுகொண்டிருப்பதைக் கண்டதும்,

“ஏண்டா? கிட்டு! என்ன விசேஷம்?” என்று வினவினான். கிட்டு,

“சபேசா! சென்ற ஒருமணிநேரமாக உனக்காகக் காத்துக்கொண்டிருக்கிறேன். கமலம் தன் ரஹஸ்யத்தை வெளியிட்டுவிட்டாள். அவளுடைய நிலைமை மிகவும் பயங்கரமாயிருக்கிறது. நீதான் அவளைக் காப்பாற்றவேண்டும்.” என்று கெஞ்சவே, சபேசன், பிரியத்துடன்,

“வா; வா; உள்ளே போவோம். பிறகு விஷயத்தை விபரமாய்ச் சொல்லு.” என்று, தன் நண்பனை அழைத்துக்கொண்டு, சபேசன் உள்ளே சென்றான். அங்கு, ராஜம் அவனைக் கண்டதும் அவனை நோக்கி ஆவலுடன் ஓடிவந்தவள், பாலகிருஷ்ணனைப் பார்த்ததும், வெட்கி, மறுபடியும் சமையலறைக்குள் மறைந்துவிட்டாள். சபேசன், பாலகிருஷ்ணனைத் தன் அறையில் உட்காரவைத்துவிட்டுத் தன் தங்கையிடம் சென்று,

“அம்மா ராஜம்! முடியுமானால் கொஞ்சம் காப்பி வைத்துக்கொடு.” என்று சொல்ல, அப் பெண்மணி,

“நீ எப்படியும் வருவாயென்று எனக்குத் தெரியுமாகையால் காப்பி போட்டு வைத்திருக்கிறேன்.” என்று சொல்லிக்கொண்டே, ஒரு கூஜாவிலிருந்த காப்பியை இரு கோப்பைகளில் விட்டுக் கொடுக்கச் சபேசன், அவைகளுடன், மறுபடியும் தன் நண்பனிருக்குமிடத்திற்குச் சென்றான். அக் காரியம் முடிந்ததும், சபேசன்,

“சரி; இனி விஷயத்தை சீக்கிரம் சொல்லு.” என்று கூறவே, பாலகிருஷ்ணன், மளமளவென்று கமலம் சொன்ன கதையைச் சொல்லி முடித்தான். அவன் பேசிக்கொண்டேயிருக்கையில், சபேசன் மனதில் ஒருவித சந்தேகம் தோன்றி, அது அதிகரித்துக்கொண்டே வந்தது. கடைசியில், பாலகிருஷ்ணன் தன் பேச்சை நிறுத்திய பொழுது, அவனுக்குண்டான ஆச்சர்யத்திற்கும் சந்தோஷத்திற்கும் அளவில்லை. பிறகு, தன்னிடத்தைவிட்டுத்



தாவிக் குதித்து, ஆநந்தம் தாங்காமல் தன் தோழனை இறுகக் கட்டிக்கொண்டு,

“சபாஷ்! சபாஷ்! விஷயம் வெட்டவெளிச்சமாய்விட்டது.” என்று குதித்தான். பாலகிருஷ்ணன், வியப்புற்று,

“சபேசா! என்ன இது?” என்று ஆவலுடன் கேட்க, சபேசன்,

“ஹா! கிட்டு! இவ்வித உதவியை நான் சற்றும் எதிர்பார்க்கவில்லை. உன் காதலி, கமலத்தைக்கொண்டே, நான் பல காரியங்களைச் செய்யப் போகிறேன். நீ அவளைப் பற்றிக் கொஞ்சமும் கவலைப்படவேண்டாம். சந்தர்ப்ப சாக்ஷியங்கள் அவளுக்கு மிகவும் விரோதமாயிருந்தபோதிலும் அவள் அக் குழந்தையைக் கொல்லவில்லை என்பது நிச்சயம். இன்னும் தற்சமயம் நம்மூர் மடத்துத்தெருவில் நடந்திருக்கும் கொலைக்கும் சென்னையில் நடந்த அக் குழந்தையின் கொலைக்கும் சம்பந்தமுண்டென்பதில் ஐயமில்லை. வா; வா; எனக்குக் கமலத்துடன் கொஞ்சம் பேசவேண்டும்.” என்று சொல்லித் தன் தங்கையிடம் சென்று, தான் அவசர காரியமாய் வெளியே போய்விட்டு வருவதாக, விடைபெற்றுக்கொண்டு, மறுநிமிஷம், தன் நண்பனுடன், கோபாலய்யர் வீட்டைநோக்கி ஆவலுடன் சென்றான்.

விசனமே வடிவாகக்கொண்டு உட்கார்ந்துகொண்டிருந்ததைப் போன்ற கோபாலய்யர், அவ்விருவரையும் கண்டதும், எழுந்திருக்கப் பாலகிருஷ்ணன்,

“மாமா! இவன்தான் சபேசன் என்ற என் நண்பன்.” என்று கூறவே, கோபாலய்யர், சபேசனைப் பார்த்து,

“வா அப்பா! உட்கார்ந்துகொள்.” என்று உபசரித்தார். ஆனால் சபேசன், மரியாதையுடன்,

“தயவுசெய்து நான் அவசரப்படுவதை மன்னிக்கவேண்டும். நாம் இப்பொழுது காலதாமதம் செய்வதுபிசகு. எனக்கு உடனே உங்களுடைய பெண்ணுடன் சில வார்த்தைகள் பேசவேண்டும்.” என்று சொல்லவே, கோபாலய்யர்,

"அப்படியே செய்யலாம். வா; அவளுடைய அறைக்குப் போவோம்." என்று சொல்லி, அவனை அழைத்துக் கொண்டு, கமலமிருந்த அறைக்குச் சென்றார். அங்கு அப் பெண்மணி, முகம் வெளுத்து, கண்களில் நீர் ததும்ப, பைத்தியம் பிடித்தவள்போல் உட்கார்ந்துகொண்டிருந்தாள். சபேசனைக் கண்டதும், திடுக்கிட்டு எழுந்து நின்றாள். அவளுடைய கலவரத்தைக் கண்ட பால்கிருஷ்ணன்,

"கமலம்! பயப்படாதே. இவன் என்னுடைய ஆப்த சிநேகிதன். இவன் முனையும்பக்ஷத்தில், உன்னைக் கண்டிப்பாய்க் காப்பாற்ற முடியும்." என்று சொல்லவே, அவள் சற்றுத் தைரியமடைந்து, லஜ்ஜையுடன், தரையை உற்று நோக்கியவண்ணமிருந்தாள். சபேசன், அன்புடன்,

"அம்மா! நீ என்னை உன் தமையனென்றே மதித்து நான் கேட்கும் சில கேள்விகளுக்கு விடையளிக்கவேண்டும். முதலில் உன் தோழியின் பெயரென்ன?" என்றான்.

கமலம் :—"அவளுடைய பெயர் மங்களம்."

சபேசன் :—"பேஷ்! அது அப்படித்தானிருக்குமென்று நினைத்தேன். சரி இப் படத்திலிருப்பவள் அவள் தானாவென்று பார்." என்று சொல்லி சென்னையில் முத்துசாமி அய்யரின் வீட்டுச் சொந்தக்காரப் பாட்டி கொடுத்த அப் புகைப் படத்தைக் காண்பித்தான்.

கமலம்:—(அதைப் பார்த்ததும் வியப்புற்று, ஆவலுடன்,) "ஆம்! இவளே! இது எப்படி உங்களிடம் அகப்பட்டது?

சபேசன் :—"சரி! அதைப்பற்றிப் பிறகு சொல்லுகிறேன். ஆமாம்! இவளை மோசம் செய்து கெடுத்த அச் சண்டாளனுடைய பெயரென்ன?

கமலம் :—"அதுவா? முத்துசாமி அய்யர்."

சபேசன்.—"சபாஷ்! தற்சமயம் உன் தோழி எங்கே?

கமலம் :—"அது எனக்குத் தெரியாது.



சபேசன் :—"பாதகமில்லை. சென்னையில் அவளுடைய வீட்டு விலாசம் உனக்குத் தெரியுமோ?"

கமலம் :—"நன்றாய்த் தெரியும். ஆனால் இப்பொழுது அவர்கள் அங்கில்லையென்றே நினைக்கிறேன்."

சபேசன் :—"ஏன்? அதற்குங் காரணமென்ன?"

கமலம் :—"நான் இங்கு வந்தபிறகு, அவ் விலாசத்திற்கு இரண்டு மூன்று கடிதங்கள் எழுதினேன். அவைகளெல்லாம் திரும்பிவந்துவிட்டன. இன்னும், அவ்வீட்டின் சொந்தக்காரர்களுடைய பெண் என் தோழியாகையால், அவளுக்கு அவர்களைப் பற்றி விசாரித்து ஒரு கடிதம் எழுதினேன். அவள், நான் இங்குவந்து சிலதினங்களுக்குள், மங்களத்தின் தந்தை பம்பாயிலிருந்து திரும்பிவந்துவிட்டதாகவும், அவர் வந்த மறுநாள் என் தோழி இறந்துவிட்டதாகவும், அவளுடைய தந்தை உடனே அவ் வீட்டைக் காலிசெய்துவிட்டு தன் சொந்தக் கிராமத்துக்குப் போய்விட்டதாகவும், பதில் எழுதினாள். அக் கடிதம் நேற்றே வந்தது."

சபேசன் :—"அவர்களுடைய சொந்தக் கிராமம் எது?"

கமலம் :—"அது ஐயம்பேட்டைக்குச் சமீபத்திலுள்ள ஆடுதுறை என்ற ஒரு சிறு கிராமம். அதில் அவர்களுக்கு ஏதேஷ்டமாய் நிலபலங்களுண்டு. என் தோழியின் தந்தையே அதில் பிரபலமான பணக்காரர்."

சபேசன் :—"அவருடைய பெயரென்ன?"

கமலம் :—"மணி அய்யர்."

சபேசன் :—"சரி; நீ இவ்வளவு பெரியமனதுபண்ணி என் கேள்விகளுக்கு விடையளித்ததைப்பற்றி மிகவும் சந்தோஷப்படுகிறேன். அம்மா! நீ சற்றும் கவலைப் படவேண்டாம். கூடியசீக்கிரம் நீ இந்த இக்கட்டிலிருந்து மீட்கப்படுவாயென்று நம்பு." என்று கோபாலய்யர் பக்கம் திரும்பி,

"ஐயா! கடைசில் நான் இப்பொழுது கைக்கொண்டிருக்கும் கார்யத்தில் ஜயமடைய உங்களுடைய பெண்ணை ஹேதுவானாள். நான் அவளைப் பார்க்கும்வரையில், இந்த மங்களமென்ற பெண்ணின் தந்தையை எப்படிக் கண்டுபிடிப்பதென்றே கவலைப்பட்டுக்கொண்டிருந்தேன். இனி அதில் யாதொரு கஷ்டமுமில்லை. சிலதினங்களுக்கு முன், நம்மூர் மடத்துத்தெருவில் கொலைசெய்யப்பட்டது இந்த மங்களமென்ற பெண்ணைக் கெடுத்த அதே முத்துசாமி அய்யர்,..." என்று அவன் மேலே பேசுமுன், கோபாலய்யர், வியப்புற்று,

"என்ன? முத்துசாமி அய்யரா? அவர் வக்கில் தாண்டவம்ஐயரல்லவோ?" என்று வினவினார். சபேசன்,

"அவர் தாண்டவம்ஐயரல்ல. ஆனால் இதுவரையில் எல்லோரும் அப்படித்தான் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த முத்துசாமி அய்யரும் வக்கில் தாண்டவம்ஐயரும், பார்ப்பதற்கு ஒருவரைப்போலவே இருந்திருக்கிறார்கள். அதன்பலனாய் இவ்வளவு வம்புகளும் நடந்திருக்கின்றன. எல்லாவற்றிற்கும், நான் உடனே இந்த ஆடுதுறை என்ற கிராமத்துக்குப் போகவேண்டும். இன்னும் வக்கில் தாண்டவம்ஐயருடைய பெண் ஜானகி இப்பொழுது போனவிடம் தெரியவில்லை. அவளையும் இந்த ஆடுதுறை மணி அய்யர் தான் அபஹரித்துக் கொண்டுபோயிருக்க வேண்டுமென்று நினைக்கிறேன். ஆகையால், நான் காலதாமதம் செய்வது பிசகு." என்றான். கோபாலய்யர், ஆவலுடன், அவனுடைய கைகளைப் பற்றிக்கொண்டு,

"அப்பா! உன் முகத்தையும் பேச்சையும் கவனிக்கும்பொழுதே நீ மகா சாமர்த்தியவான் என்பது தெரிகிறது. நீ எப்படியாகிலும் என் பெண்ணை இந்த ஆபத்திலிருந்து காப்பாற்றும்பக்ஷத்தில், நான் சாகும்வரையில் நன்றியறிவுள்ளவனாயிருப்பேன்." என்றார். சபேசன், விநயத்துடன்,



"நீங்கள் கவலைப்படவேண்டாம். புருஷனாய்ப் பிறந்த ஒவ்வொருவனும், பெண்கள் ஆபத்தில் மாட்டிக்கொள்ளும்பொழுது, சக்தியுண்டானால், அவர்களைக் காப்பாற்றக் கடமைப்பட்டவன்." என்று விடையளிக்கவே, கோபாலய்யர்,

"அப்பா! உன்னைப்போன்ற உத்தம வாலிபர்கள் இக் கலியுகத்தில் அதிகமிருக்கமாட்டார்கள். உன்னைத் தெய்வம், அவசியம், முன்னுக்குக் கொண்டுவரும்." என்று சொல்லிக்கொண்டிருக்கையில், அவ் வீட்டு வேலைக்காரன் ஒருவன் அங்குவந்து சபேசனை யாரோ தேடுவதாகச் சொல்ல, அவ் வாலிபன் வெளியே சென்றான். மறுநிமிஷம். ஆச்சர்யம் தாங்காமல் "ஹா!" என்று கூவினான். அங்கு அவனை மிகவும் ஆவலுடன் எதிர்பார்த்தவண்ணம் ஒரு கிழவர் நின்றுகொண்டிருந்தார். அவர், சுமார் ஒருமாத காலத்திற்குமுன், வக்கில் தாண்டவம்ஐயருடைய பெண் ஜானகி, நித்தியபுரீசுவரஸ்வாமி கோயிலிலிருந்து திரும்புகையில், ஆபத்தில் சிக்கிக்கொண்டு, தன் கற்பை இழக்குந்தருவாயில், அவளைச் சபேசன் காப்பாற்றக் காரணமாயிருந்த, அப் பாபியின் வீட்டுச் சமையற்காரப் பிராமணரேயொழிய வேறல்ல.

## அத்தியாயம் 13.

முத்துசாமி அய்யரால் கெடுக்கப்பட்ட மங்களத்தின் தந்தை மணி அய்யருக்கு, ஐயம்பேட்டைக்கருகிலுள்ள ஆடுதுறை என்ற கிராமத்தில் எதேஷ்டமான நிலபலங்களுண்டென்பதை நம் நேயர்கள் அறிவார்கள். இன்னும் அவருக்கு, பார்ப்பவர் பிரமிக்கத்தக்க, மாளிகைபோன்ற ஒரு வீடுமுண்டு. அதைச் சுற்றிலும், அழகிய தோட்டங்களும், அவற்றில் பிரயோஜனமுள்ள பல பெரிய மரங்களும் காணப்பட்டன. மணி அய்யர், சுபாவத்தில் நல்ல உதாரகுண சீலராகையால், அக் கிராமவாசிகள் எல்லோரா

புதல்வி, ஜானகியே என்பதை நாம் சொல்லவேண்டியதில்லை. அச்சமயம் அவளுடைய முகத்தில் காணப்பட்ட பயத்தையும் கவலையையும் கண்ட எப்பேர்ப்பட்ட கல்நெஞ்சனும் கண்ணீர்விட்டுக் கதறாமலிருக்கமுடியாதென்றால், அவளுடைய பயங்கர நிலைமையை நாம் வர்ணிக்கவேண்டியதும் அவசியமோ? ஒருதரம், தன் முகத்தைத் திருப்பிச் சொல்லொணாக் கலவரத்துடனும் பீதியுடனும் பக்கத்தில் நின்றுகொண்டிருந்த மணி அய்யரைப் பார்த்தவள், மறுவினாடி தன் கண்களை இறுக மூடிக்கொண்டாள். அவளுடைய மார்பு எழும்பி எழும்பி விழுந்தது. தன் நிலைமையை அவள் நன்கறிந்தவளாகையால், தன்னை அக் கட்டிலிருந்து விடுவித்துக்கொள்ளக் கொஞ்சமும் பிரயத்தனப்படவில்லை. அந்தோ! சாந்தமும் நற்குணமும் அவதாரமோவென்று நினைக்கத்தக்க, அப் பேதைப்பெண்மணியை, அவ்விதம் சற்றும் ஈவு இரக்கமின்றி மறுபடியும் கெடுக்கத் தீர்மானித்த அச் சண்டாளனின் நீசசுபாவத்தை என்னென்று கூறுவது? ஆனாலப்படிச் செய்ய, மணி அய்யர் சொல்லக்கூடிய காரணங்களை யார் அறிவார்? அவர், தம் இடுப்பைத் தம் கரங்களால் தாங்கியவண்ணம், அப் பெண்மணியைக் கொஞ்சநேரம் உற்றுநோக்கினார். பிறகு வாயைத் திறந்து உறுதியுடன் பேசலானார்.

“அடியே! நீ கனகபுரியில் என்னிடமிருந்து தப்பியதை நினைக்க, எனக்கு இன்னும் ஆச்சர்யமாயிருக்கிறது. தவிர, இவ்வளவு சிரமப்பட்டு நான் உன்னை அபகரித்துக்கொண்டு வந்திருந்தும், இந்த இரண்டு நாட்களாய் நான் உன்னை ஒன்றும் செய்யமுடியாமற்போனது இன்னும் வியக்கத்தக்கதே. பூஜை வேளையில் கரடியை விட்டு ஓட்டியதைப்போல், என் நண்பன் வந்துசேர்ந்தான். ஆனால், இனி ஒருவினாடி நேரமும் நான் தாமதிக்க நியாயமில்லை. அடியே! கனகபுரியில் உன்னைக் காப்பாற்றிய அவ் வாலிபன் இப்பொழுதும் காப்பாற்ற முடியாது. இன்னும், இக் கிராமத்தில், நான் இதைச் செய்யாமற் தடுக்க, தைரியமும் சக்தியுமுள்ளவன் ஒருவனுமில்லை.” என்று தம்



பேச்சை நிறுத்திவிட்டு, முகத்தைத் திருப்பிக்கொண்டார். அச்சமயம் அவருடைய பார்வை எதிரில் தொங்கிக்கொண்டிருந்த அவருடைய பெண் மங்களத்தின் ஒரு பெரிய படத்தின்மேல் விழவே, அவருடைய கண்களில் நீர் நிறைந்தது.

“ஹா! என் செல்வமே! அப் பாபி உன்னை மோசம் செய்துவிட்டானென்பதை அறிந்ததும், உன் மனம் எப்படிப் பதறியதோ? அம்மா! பிறகு நீ தற்கொலை செய்துகொள்ளத் தீர்மானித்து, அவ் விஷத்தைக் குடிக்குமுன் உன் மனம் எப்படித் துடித்ததோ? கண்மணி! இதோ அப் பாபியின் பெண்ணை, நீ பட்ட கஷ்டங்களை எல்லாம் அநுபவிக்கும்படி செய்கிறேன். அவளுடைய கற்பை அழித்து, அவளையும் உன்னைப்போல் தற்கொலை செய்துகொள்ளும்படி செய்கிறேன்.” என்று நடுங்கத்தக்கவிதம் சபதம் செய்துகொண்டு, திரும்பி, பிரேதம்போல் கிடந்த ஜானகியை மறுபடியும் உற்றுநோக்கினார். உடனே அவருடைய கோபாவேசம் பொங்கியெழுந்தது. தம் பற்களைப் பயங்கரமாய்க் கடித்துக்கொண்டே, ஒரே பாய்ச்சலாய்ப் பாய்ந்து, அப் பெண்மணியின சரீரத்தைப் பற்றி அதை ஆத்திரத்துடன் பலதரம் குலுக்கினார். பிறகு சற்றும் கைகூசாமல், அவளுடைய இடுப்பின் கீழிருந்த கட்டுக்களை அவிழ்க்கவே, ஜானகி, தன் கால்களை இறுகப் பின்னிக்கொண்டு, சொல்லமுடியாத அவஸ்தையுடன் தன் சரீரத்தை முறுக்கிக்கொண்டாள். ஆனால், மணி அய்யர், சற்றும் தயங்காமல், ஒரு கரத்தால் அவளுடைய கால்களை அழுத்திக்கொண்டு, மற்றொரு கரத்தால் அவளுடைய இடுப்புத் துணியைப் பற்றி இழுக்கும் தறுவாயிலிருந்தார்.

ஆஹா! எக் குற்றத்தையும் செய்யாத அப் பெண்மணி அவ்விதம் தன் கற்பை இழக்க, எங்கும் நிறைந்த தெய்வம் சம்மதிக்குமோ? பாஞ்சாலியின் கற்பைக் காத்த பரம்பொருளன்றோ பரந்த உலகத்தைக் காத்துக்கொண்டிருக்கிறது. சுமார் ஒருமாதகாலத்திற்கு முன், மணி அய்யர் கனகபுரியில் அவளுடைய கற்பையழிக்கும் தறுவாயி

விருந்தபொழுது, வெளியில் அவ்வறையை நோக்கி யாரோ ஓடிவரும் தடதடவென்ற சப்தம் கேட்டதுபோலவே, தற் சமயமும் கேட்க, அவர் திடுக்கிட்டு மரம்போல் நின்றார். இப்பொழுது வந்ததும் அதே சபேசனையொழிய வேறல்ல. அவன் எப்படி அங்கு வந்தானென்பதை நாம் இங்கு விவரித்து எழுதவேண்டியதில்லை. நல்லவேளையாய், அவ்வறையின் உட்பக்கம் இருந்த ஒரு ஜன்னல் திறந்திருக்க, அதன் வழியாய், உள்ளே எட்டிப் பார்த்தவன், மணி அய்யர், ஜானகியின் இடுப்புத் துணியைப் பற்றியவண்ணம், நின்றுகொண்டிருப்பதைக் கண்டதும், பதறிய மனதுடன்,

"ஐயா! வேண்டாம்! உடனே அவளை விட்டுவிடும். அவள் நீர் நினைப்பதைப்போல் உம்முடைய பெண்ணைக் கெடுத்த அப் பாபியின் பெண்ணல்ல. நீர் உடனே கதவைத் திறக்காவிடில் அதை உடைத்துவிடுவேன்." என்று உரத்த குரலில் கூறவே, மணி அய்யர், இனித் தாம் எதையும் செய்யமுடியாதென்பதையும், தாம் காலதாமதம் செய்யும்பக்ஷத்தில் அவன் கண்டிப்பாய்க் கதவை உடைத்து விடுவானென்பதையும், அவனுடைய குரலிலிருந்து அறிந்து கொண்டார். ஆனால், உடனே கதவைத் திறக்காமல், தடுமாற்றத்துடன்,

"அடே! இப் பெண் அப் பாபியின் மகளல்ல என்று நீ சொல்வதை நம்ப நான் அவ்வளவு மடையனல்ல." என்று அவர் மேலே பேசுமுன், சபேசன், அவ் தாங்காமல்,

"ஐயா! நான் என் பெற்றோர்கள்மேல் ஆணையாய்ச் சொல்லுகிறேன். இவள் அச் சண்டாளனுடைய புதல்வி அல்ல. அப் பழிகாரனும், இவளுடைய தந்தையும் பார்ப்பதற்கு ஒருவரைப்போலவே இருந்ததால், நீர் இவளுடைய தந்தையே மங்களத்தை மோசம் செய்த பாபியென்று நினைத்து இதற்குள் இரண்டுதரம் இவளுடைய கற்பை அழிக்க முயன்றுவிட்டீர். முதலில் கதவைத் திறவும்." என்று மன்றாடினான்.



இதைக் கேட்டதும், மணி அய்யர் அப்படியே கல்லைப்போல் நின்றார். பிறகு,

"அப்பா! நீ சொல்லுவது நம்பத்தக்கதாயில்லை. ஆகையால், அதை நிரூபிக்காதவரையில் கதவைத் திறக்கமாட்டேன். ஆனால் அது வாஸ்தவமாயிருக்கும்பக்ஷத்தில், நான் எவ்வித தண்டனைக்கும் உட்படத் தயார்." என்று சொல்லவே, சபேசன், ஆத்திரத்துடன்,

"இதோ இக்கடிதங்களை நீர் வாசிப்பீராகில் உண்மையைத் தெரிந்துகொள்வீர். இந்தாரும்." என்று சொல்லித் தாண்டவம்ஐயரால் முத்துசாமி அய்யருக்கு எழுதப்பட்ட சில கடிதங்களை அவரிடம் கொடுத்துவிட்டு, "ஐயா! உமக்குக் கோடி புண்ணியமுண்டு. முதலில் கதவைத் திறந்துவிட்டுப் பிறகு இவைகளை வாசியும். அதோ அப் பெண் அந் நிலைமையில் கிடப்பதைக் காண என்னால் சகிக்கமுடியவில்லை." என்று கெஞ்சவே, மணி அய்யர், கதவைத் திறந்துவிட்டு, பரபரப்புடன் அக் கடிதங்களை வாசிக்கலானார்.

நிற்க, சபேசன், ஆவலுடன் ஓடி, கட்டிலில் கிடந்த ஜானகியை விடுவிக்கவே, அப் பெண்மணி அப்படியே அவன்மீது பாய்ந்து, அவனை இறுகக் கட்டிக்கொண்டு விம்மி விம்மி அழ ஆரம்பித்தாள். அச்சமயம், அவளுடைய கண்களில், நன்றியறிவு, ஆச்சர்யம், ஆநந்தம் இம் மூன்றும் ஒன்றுசேர்ந்து காணப்பட்டன. சபேசன், அவளை அணைந்தவண்ணம், அன்பொழுகும் சொற்களால் அவளைச் சமாதானப்படுத்திவிட்டு, மணி அய்யர் பக்கம் திரும்பி, கடுமையான பார்வையுடன்,

"ஐயா! நீர் என்ன கார்யம் செய்யத் துணிந்துவிட்டீர்? வாஸ்தவமே. உம்மைப்போல் அநியாயமாய்த் தம் பெண்ணைப் பறிகொடுத்த எவனும், பழிக்குப் பழி வாங்க வேண்டுமென்ற வைராக்கியத்தைக் கட்டுப்படுத்தமுடியாதென்பதை ஒப்புக்[illegible]கிறேன். ஆனால், அதற்காக, ஒருபாவ[illegible]ணை நீர் கெடுக்க முயன்றது [illegible] க் கொன்றதன்றி

விருந்தே வேண்டிய திருப்தியை அடைந்திருக்கவேண்டும்." என்றான்.

ஆனால் இவ்விதம் சபேசன் பேசியதை மணி அய்யர் கவனிக்கவே இல்லை. அவர் ஊக்கத்துடனும் அவசரத்துடனும் அக் கடிதங்களை வாசித்துக்கொண்டிருந்தார். வர வர அவருடைய முகத்தில் அதுவரையிலிருந்த ரௌத்திராகாரம் குறைந்தது. வியப்பும் கவலையும் தோன்றின. கடைசியில் குழம்பிய மனத்துடன்,

"அப்பா! இக் கடிதங்களிலிருந்து இந்த முத்துசாமி அய்யரே, என் பெண்ணைக் கெடுத்தவன் என்பது சந்தேகமின்றி வெளியாகிறது. ஆனால் நான் இந்தத் தாண்டவம ஐயர்தான் அப் பாபியென்று நினைத்தது ஆச்சரியப்படத்தக்கதல்லவென்பதை நீயே ஒப்புக்கொள்வாய். என் பெண்ணின் கற்பையழித்த அச் சண்டாளனுடைய பெயரை நான் அறியாததாலும் அவனை நான் மங்களத்தின் பெட்டியிலிருந்த ஒரு புகைப்படத்தைக்கொண்டு அடையாளங் கண்டுபிடிக்கவேண்டியிருந்ததாலும், எல்லாம்போக, பார்த்ததும் அவனேயென்று ஏமாறத்தக்க மற்றொருவரிருக்கக் கூடுமென்பதை நான் எதிர்பார்க்காததாலும், இக் காரியத்தைச் செய்துவிட்டேன்." என்று சொல்ல, சபேசன்,

"ஐயா! நீர் இந்தத் தாண்டவம்ஐயரே முத்துசாமி அய்யர் என்று நினைத்துக்கொண்டதில் யாதொரு பிசகும் இல்லை. இன்னும் நீர் அப் பாபியை கொலைசெய்ததும் நியாயமே...." என்று மேலேபேசுமுன், மணி அய்யர், திடுக்கிட்டவராய்,

"என்ன? என்ன சொன்னாய்? அப் பாபியைக் கொலை செய்ததா? சரி; அதுபோகட்டும். ஆனால் தற்சமயம் கொலை செய்யப்பட்டிருப்பவர் வக்கீல் தாண்டவம்ஐயரல்லவோ?" என்று வினவினார். சபேசன்,

"இல்லை என் [illegible] று விடையளிக்க, மணி [illegible]

18877